வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.04.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 141 | பக்கங்கள் : 16




## இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கு இணங்குகிறேன்!

### மகாநாயக்கர்களுக்கு ஜனாதிபதி உறுதி



கொழும்பு, ஏப். 26

"இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நான் இணங்குகிறேன். அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்" - இவ்வாறு மூன்று மகாநாயக்க தேரர்களுக்கு எழுத்துமூலம் உறுதிமொழி வழங்கியிருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

முப்பெரும் பீடாதிபதிகளுக்கு

15

## மஹிந்த பதவி விலக ஒரு வார அவகாசம்!

### 120 எம்.பிக்கள் எங்களது பக்கம் காலக்கெடு விதித்தார் கம்மன்பில



கொழும்பு, ஏப். 26

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கம் ஒரு வாரத்துக்குள் பதவி விலகவேண்டும். இல்லையெனில் ஐக்கிய மக்கள் சக்தி தயாரிக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 120 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது என பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக 113 உறுப்பினர்களைச் சேர்க்கும் வரை பொறுமை காக்குமாறு மக்களிடம் ஐக்கிய மக்கள்

15

# எதையும் எதிர்கொள்ள பிரதமர் மஹிந்த தயார்!

## நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேறினாலும் மீண்டும் பெரமுனவே ஆட்சியமைக்கும் நிலைமை

கொழும்பு, ஏப்ரல் 26

**எதையும் எதிர்கொள்வதற்கு தயாரான நிலையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார் என்று அவருக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.**

இதனிடையே, நேற்று மாலை ஆரம்பமான அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தார். இந்தக் கூட்டத்தில், அவர் 20ஆவது திருத்தச் சட்டத்தை ஒழித்து 19ஆவது திருத்தச் சட்டத்தை மீளவும் அமுல்படுத்துவதற்கான முன்மொழிவுகள் அடங்கிய ஆவணங்களுடன் சென்றிருந்தார். (இந்த செய்தி எழுதப்படும்போது கூட்டம் நிறைவுபெறாமையால் அவரின் சமர்ப்பணத்தை உறுதி செய்ய முடியவில்லை.)

இந்நிலையிலேயே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தக் கருத்துக்களை பிரதமரின் அலுவலக அதிகாரிகள் மறுத்திருந்தனர். இந்நிலையிலேயே எதையும்

15



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து பரிசுத்த பாப்பரசர் நேற்று வத்திக்கானில் விசேட ஆராதனை நடத்தி அவர்களை ஆசீர்வதித்தபோது....

## 21ஆம் திருத்த யோசனைகளுக்கு அமைச்சரவை நேற்று அனுமதி!

கொழும்பு, ஏப். 26

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வாக 20ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 19 ஆவது திருத்த சட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய 21ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான

15

## ஆறு மாதங்களுக்கு இடைக்கால அரசு!

### சந்திரிகா யோசனை



கொழும்பு, ஏப். 26

பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதமர் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை ஆறு மாதங்களுக்கு ஏற்படுத்துவதற்கான யோசனையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்வைத்துள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படும் அரசியல்

15

## நாணய நிதியத்தை நாடியதால் சீன அரசின் உதவியில் தாமதம்!

### அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான இலங்கையின் முடிவானது, இலங்கைக்கான 2.5 பில்லியன் டொலர்களின் சீன உதவி தொடர்பான பேச்சுவார்த்தைகளை தாமதப்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கான சீனாவின் ஆதரவானது, குறிப்பிட்ட கட்சி அல்லது அரசாங்கத்தை

15

## தமிழர்களுக்கு நியாயமான தீர்வு; இயன்றளவு அமெரிக்கா உதவும்!

### தமிழ் கட்சிகளிடம் அந்நாட்டுத்தூதர் உறுதி

யாழ்ப்பாணம்,ஏப். 26

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிட்ட அமெரிக்கா இயன்றளவு உதவும் என்று தம்மை சந்தித்த தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார். அவரை நேற்று தமிழ்க் கட்சிகளின் பிரதி

15

## இடைக்கால அரசினால் பயன் ஏதும் கிடையாது!

### கோரிக்கையை நிராகரித்தார் மஹிந்த



கொழும்பு, ஏப். 26

இலங்கையில் இடைக்கால அரசு அமைக்க வேண்டும் என்று ஆளும் கூட்டணியிலிருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது. எரிபொருள், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் நீண்ட நேர மின்வெட்டும் நிலவுகிறது. இதனால், அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

15

## யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 15 பேர் தனுஷ்கோடிக்கு

யாழ்ப்பாணம், ஏப். 26

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடையும் நோக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் 15 பேர் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக வாழ முடியாததால் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக புறப்பட்ட 15

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

"ரணில் ஒரு நரியன், அவனை நம்ப ஏலாது" - இந்த வார்த்தையை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். லண்டனில் நடைபெற்ற ஒரு மாவீரர் தின வைபவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் என்று அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை ஒன்றிலேயே இப்படி வர்ணித்திருந்தார். இதனை மெய்ப்பிக்கும் வகையிலேயே அவர் அண்மையில் கருத்து தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமையை தன்வசம் வைத்திருக்கும் ஒரு மாபெரும் கட்சியை இன்று வழி நடத்திச் செல்பவர் தலைவர் சம்பந்தன் என்றாலும், அவருக்கு தளபதிபோல செயல்பட்டுக்கொண்டிருப்பவர் நமது சுமந்திரன் என்பது இரகசியமானது அல்ல. சிலவேளைகளில் சம்பந்தனை கேட்காமலே அவர் முடிவெடுக்கின்ற அளவுக்கு செல்வாக்குள்ள தலைவர் அவர்.

நல்லாட்சி அரசில் அவர் சம்பந்தனின் நிழலாக மாத்திரமல்ல, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிழலாகவும் ஓடித்திரிந்ததை நாம் கண்டிருக்கின்றோம். ஆனால், கடந்த பாராளுமன்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியும் படுதோல்வி அடைந்த பின்னர், சுமந்திரன் தனது பழைய விசுவாசத்தை தூக்கி வைத்துவிட்டு செயல் பட்டதையும் நாம் கண்டிருக்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க தோற்றுப்போன தலைவர் என்றுகூட சுமந்திரன் பகிரங்கமாக விமர்சனம் செய்தார். அது உண்மை என்றாலும், ஒரு நாகரிகத் திற்காகவாவது அவரை அப்படி விளித்திருக்கக்கூடாது.

இவற்றை மனதில் வைத்துக்கொண்டுதான் ரணில் இப்போது தனது "நரித்தனத்தை" காட்டியிருக்கிறார் என்கிறார் லண்டனில் உள்ள அரசியல் விமர்சகர் ஒருவர்.

சுமந்திரனை, "எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்" என்று ரணில் விளித்ததை பலரும் பெருமையாக பேசுவதையும், முகநூல் போராளிகள் துள்ளிக்குதிப் பதையும் இப்போது காணமுடிகின்றது. ரணில் அவ்வாறு சொன்னது, நகைச்சுவையாகவா அல்லது, ஏளனம் செய்வதற்காகவா என்பதை ரணிலை தெரிந்தவர்கள்தான் உணர்ந்துகொள்ள முடியும்.

பதினைந்தாம் ஆண்டில் நடந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர், யாழ்ப் பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட விடயம் ஒன்றை தெரிந்துகொண்டவர்கள் ரணில் கிண்டலடித்திருப்பதை உணர்வார்கள்.

சுமந்திரன், தமிழர் அரசியலைப் பொறுத்தவரை இன்று தவிர்க்க முடியாத ஒரு தலைவராக இருப்பவர். அவரின் அரசியல் எந்தத் திசையில் செல்கின்றது என்பது இன்றும் ஒரு மர்மமானதாக இருந்தாலும், அவர் தவிர்க்க முடியாதவர் என்பதை சகலரும் ஏற்றுக் கொள்வார்கள்.

அத்தகையை தமிழர் தலைவர்களில் ஒருவரை சட்டமா அதிபர் ரேஞ்சுக்கு கொண்டு வந்திருக்கிறார் ரணிலர். சட்ட மா அதிபர் என்பவர் யார்? அவர் ஓர் அரச அதிகாரி.

இலங்கையின் சட்டமா அதிபர் என்பவர் இலங்கை அரசின் தலைமை சட்ட ஆலோசகரும், இலங்கை உயர் நீதிமன்றத்தில் இலங்கை அரசின் முதன்மை வழக்கறி ஞரும் ஆவார். இவரே சட்டமா அதிபர் திணைக் களத்தின் தலைவர். இப்பதவிக்குத் தகுந்தவரை ஆளும் கட்சியே நியமனம் செய்கிறது.

மைத்திரிபால ஜனாதிபதியாக இருந்தபோது அவர் நியமித்த சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரி லேயே அவர் மஹிந்தவை பிரதமராக்கினார். பின்னர் அதுதொடர்பாக உயர்நீதிமன்றில் நடந்த வழக்கிலும் மைத்திரி செய்தது சரியே என்று வாதாடியதையும் நாம் பார்த்தோம். ஆக, சட்ட மா அதிபர் என்பவர் தன்னை நியமித்த அரசுக்காக வாதாடுகின்ற ஒரு வழக்கறிஞர்.

இப்போது, சுமந்திரனை எதிர்க்கட்சிகளின் வழக்கறி ஞராக அவர் அழைப்பது, அவர் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் தலைவன் அல்ல என்று சொல்ல வருகின்றாரா, அல்லது, தொடர்ந்து அவரை தங்கள் ஊழியராகவே வைத்திருக்க விரும்புகின்றோம் என்பதை சொல்ல வருகின்றாரா?

ரணிலை தெரிந்தவர்கள், அவர் கிண்டலடித்திருக்கி றார் என்பதை புரிந்துகொள்வார்கள். அதனைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான், அது குறித்து மகிழ்ச்சியடை கிறார்கள்!

- ஊர்க்குருவி

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 26

கொழும்பை அண்மித்துள்ள ஒரு சில வீதிகளில் ஏற்படுத்தப் பட்டுள்ள வீதித் தடைகளில் கூரிய ஆணி போன்ற கம்பி களை பொருத்தி கறுப்பு நிற பொலித்தீனால் மறைத்து வைக் கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

இதன் காரணமாக மக்க ளுக்கு பாரிய காயங்கள் ஏற் படுவதற்கான அபாயம் நிலவு கின்றமை தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக சட் டத்தரணிகள் சங்கம் விடுத் துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர், பொலி ஸார் மற்றும் படையினர் எந்த வொரு நிலைமையின் கீழும் எதிர்ப்பில் ஈடுபடுபவர்கள் மற் றும் பொதுமக்களின் பாது காப்பை உறுதிப்படுத்தவும் அமைதியாக ஆர்ப்பாட்டங்க ளில் ஈடுபடுவதற்கும் சுதந்திர மாக நடமாடுவதற்கும் உள்ள மக்களின் உரிமையை பாது காப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை சட் டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஏதேனும் வன்முறை சூழல் ஏற்பட்டால் அது நாட்டுக்கு பாரிய எதிர்விளைவுகளை ஏற் படுத்தக்கூடும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தின் அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ)

## இருதய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 26

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக இருதய நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் நிபுணர் வைத்தியர் கோட் டாபய ரணசிங்க தெரி வித்தார்.

இதன்படி, மேல் மாகா ணத்தில் மாத்திரம் பதிவாகும் இருதய நோயாளர்களின் எண் ணிக்கை 30 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ள தாகவும் அவர் கூறினார்.

இந்த நிலைமையை புரிந் துணர்வுடன் எதிர்கொள்வ தைத் தவிர வேறு வழியில்லை என அவர் மேலும் குறிப்பிட் டார். (அ)

## கப்ரால் வெளிநாடு செல்ல தடை

கொழும்பு, ஏப். 26

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாடு செல்ல மேலும் ஒரு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீத வான் நீதிமன்றம் இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது.

மேலும், ஜூன் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கப்ராலுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதுடன், கப்ரால் தனது கடவுச்சீட்டையும் நீதி மன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## புகையிலை அறுவடை மும்முரம்!

வடமராட்சி, ஏப். 26

வடமராட்சி, வலிகாமம் பிர தேசங்களில் புகையிலை அறுவ டையில் விவசாயிகள் மும்மர மாக ஈடுபட்டுள்ளனர்.

புகையிலை செடி ஒன்று 350 ரூபாய் தொடக்கம் 450 ரூபாய் வரையில் வடமராட்சிப் பிரதேசத்திலும் 250 ரூபாய் தொடக்கம் 350 ரூபாய் வரை யில் வலிகாமம் பிரதேசத்தில் விற்பனையாகின்றன.

புகையிலையை உலர்த்தி, பதனிட்டு விற்பனை செய்து வரும் புகையிலை வியாபாரிகள் புகை யிலை செடியை விவசாயிகளிட மிருந்து கொள்வனவு செய்து வரு கின்றனர். கொள்வனவு செய்யப் படும் புகையி லையின் தரத்துக்கு ஏற்ப விலைகள் நிர்ணயம் செய் யப்பட்டு வருவதாக புகையிலை வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ-2)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 11 - 1949



மறைவு
20 - 04 - 2022

## நாகமணி சண்முகரட்ணம் (குஞ்சன்)

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மானிப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், கனடா Scarborough வை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சண்முகரட்ணம் அவர்கள் 20-04-2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நாகமணி, அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீபதி மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி (பவா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர் களான மனோரஞ்சிதம், சிவசுப்ரமணியம் மற்றும் செல்வராஜா, ராஜேந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,பிரியதர்சினி, நிசாந்தன், மதுரா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ரமணன், கிரேதல், பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சாயகி, லவன், அரண்யா, ஆதி, மகிமா ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான மகேந்திரன், புஷ்பராணி, திலகராஜசிங்கம், புஷ்பவதி, சாயாதேவி மற்றும் செல்வராணி, தாமரைச்செல்வி, ஜெயராணி, தர்மராணி, திருச்செந்தூரன் ஆகியோரின் மைத்துன ரும்,காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் சோதிரட்ணம், சிவசுப்ரமணியம், விசித்திரமூர்த்தி, உதயரட் ணம், மாலினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**நிசாந்தன் - மகன்** Mobile : +16472828495
**பவா - மனைவி** Mobile : +16479231381
**ரமணன் - மருமகன்** Mobile : +14166292382
**பார்த்தீபன் - மருமகன்** Mobile : +14165692365

தகவல்:
**நிசாந்தன் (மகன் )**

ஈழநாடு
Eelanadu
26.04.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், சித்திரை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## இடைக்கால அரசாங்கம்?

மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென்று ஆளும் தரப்புக்குள் குரல்கள் வலுவடைந்து வருகின்றன. ஒருபுறம் கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு செல்ல வேண்டுமென்னும் குரல்கள் வீதிகளில் ஒலிக்கின்றபோது, ஆளும் தரப்புக்குள்ளும், அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, புதிய பிரதமர் ஒருவரின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென்னும், வாதங்கள் வலுவடைந்து வருகின்றன. இந்த பின்னணியில் ஆளும் தரப்புக்குள்ளும், அணிகள் தோற்றியிருப்பதாகவே தெரிகின்றது.

இந்த அரசியல் நெருக்கடி ஒரு விடயத்தை தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதாவது, இதுவரை ராஜபக்ஷக்கள் மத்தியில் நிலவிவந்ததாக கூறப்படும் ஐக்கியமும் உடைந்துவிட்டது போன்றே தெரிகின்றது. ஏனெனில், ராஜபக்ஷக்களின் பிரச்னைகள் மாறுபட்டுவிட்டன. ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவை பொறுத்தவரையில், ஒரு கௌரவமான ஜனாதிபதியாக எவ்வாறு தனது காலத்தை நிறைவு செய்வதென்பதே அவருக்கு முன்னாலுள்ள பிரதான பிரச்னையாக இருக்கின்றது.

ஏனெனில், இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதியும் எதிர்கொள்ளாத வகையிலான சவாலை அவர், எதிர்கொண்டிருக்கின்றார். எந்தவொரு ஜனாதிபதியும் எதிர்கொள்ளதா அவமானங்களை அவர் எதிர்கொண்டிருக்கின்றார். இந்த நிலையில், தனது வீழ்ச்சியிலிருந்து முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவாவது, மீண்டெழுவதே, அவரின் முதன்மையான பிரச்னையாக இருக்கும்

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் பிரச்னையோ வேறு. தான் அரசியல் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டால், தனது அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ஷவின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிவிடும், என்பதுதான் மஹிந்தவின் முதன்மையான பிரச்னையாகும். இந்த பிரச்னையிலிருந்துதான், மஹிந்த, பதவி துறக்க தயக்கம் காட்டி வருகின்றார். இந்த இழுபறிகளின் மத்தியில்தான் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை பொதுஜன பெரமுனவால் ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றது.

மஹிந்த பதவி விலக மறுத்துவரும் நிலையில்தான், பொதுஜன பெரமுனவின் மூத்த அமைச்சர்கள் சிலரும், இடைக்கால அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பொறுத்தவரையில், இடைக்கால அரசாங்க யோசனையை நிராகரிக்க முடியாதுள்ளது. ஏனெனில், அவர் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பவர், ஒரு மரக்கட்டையாவது கிடைத்துவிடாதா - என்று, ஏங்கும் ஒருவரின் மனோநிலையில்தான் இருக்கின்றார். ஏனெனில், அவரின் முயற்சிகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை. ஒரு கையறுநிலை ஜனாதிபதியாகவே அவர் காட்சிப்படுத்தப்படுகின்றார். இதற்கபால், இன்றைய சூழலை ஓரளவு வெற்றிகரமாக கையாள வேண்டுமாயின், இடைக்கால அரசாங்கத்திற்கு செல்வதே சிறந்த யோசனையாக இருக்க முடியும். ஏனெனில், உறுதியானதோர் அரசாங்கம் இல்லாதபோது, வெளிநாடுகளிடமிருந்து உதவிகளையும் பெற முடியாமல் போய்விடும்.

# அரசை கவிழ்க்கும் விதத்தில் மேலோங்கும் மக்கள் சக்தி!

அலசுவது இராஜதந்திரி



ஒரு மாதத்துக்கு முன்னர் கொழும்பு மிரிஹானை பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லம் முன்பாக ஆரம்பமான அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கொழும்பு விஜயராமை வீதியில் அமைந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் முன்பாக ஆக்ரோஷமான முறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமர் ராஜபக்ஷவின் இல்லம் ஒரு முற்றுகைக்குள்ளான நிலையில் நேற்று முன்தினம் காணப்பட்டிருந்தது. ஜனாதிபதி ராஜபக்ஷவும், பிரதமர் ராஜபக்ஷவும் உடனடியாக பதவி விலக வேண்டும். அத்தோடு முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று காலிமுகத்திடலில் குவிந்துள்ள மக்கள் எழுப்புகின்ற கோஷமே நேற்று முன்தினம் பிரதமர் மஹந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு முன்பாகவும் பலமாக ஒலித்ததைக் கேட்க முடிந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம் முன்பாக பலமாக ஒலித்த ஆர்ப்பாட்டகாரர்களின் குரல் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் குரல் என்று குறிப்பிடுவதை விட உயர் கல்வி நிறுவனங்களில் பல்வேறு துறைகளையும் சார்ந்த எதிர்கால சந்ததியினரின் உணர்வு பூர்வமான குரல் என்றே குறிப்பிடமுடியும்.

ஆரம்பத்தில் காலிமுகத்திடலுக்கு சென்று அங்கே ஆர்ப்பாட்டம் நடத்தவே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்திருந்தது. ஆனால், அவர்கள் காலிமுகத்திடலுக்கு செல்வதை தடுக்கும் விதத்தில் இரும்பு தடுப்புகள் காலி வீதியில் போடப்பட்டிருந்தன. இதனையடுத்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள கொழும்பு விஜயராமை வீதிக்கு சென்று தமது ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதேவேளை, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் வெயிலோ, மழையோ நாளுக்கு நாள் முறுக்கேறி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை ஆளும் கட்சிக்குள்ளேயும் பிரதமருக்கு எதிரான போக்கு பாராளுமன்றத்தில் வலுவடைந்து வருகின்றது. அத்துடன் ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் முற்று முழுதாக பதவியிலிருந்து விலகி புதிய அரசொன்றை அமைப்பதற்கு வழிவிட வேண்டுமென்ற கோரிக்கையும் வலுவடைந்துள்ளது.

இத்தகைய பின்னணியில் ஆட்சியாளர்களால் அரசாங்கத்தை எவ்வளவு காலம் தப்ப வைத்துக்கொள்ள முடியும் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அப்பட்டமாகவே இன்றைய "கொலைகார அரசு" விரட்டியடிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சியில் இருக்கின்ற பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசின் தற்போதைய பலவீனமான போக்கு வெளிப்பட்ட நிலையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தற்போதைய நிலவரம் தொடர்பாக பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கூடவே, அரச தரப்பினர் தொடர்ந்து பிடிவாதமாக ஆட்சியில் இருக்க முயன்றார்களேயானால் நாட்டு நிலவரம் மிக மோசமான நிலையை எட்டிவிடுவதோடு அராஜகம் மேம்பட்டு சட்டம் - ஒழுங்கு முற்று முழுதாக நிலை தளர்ந்து போகும் சூழ்நிலைகளே பலமடையும் என்று அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவுக்குள் ஜனாதிபதி, மற்றும் பிரதமருக்கெதிரான எதிர்ப்பு ஓரிரு வருடங்களுக்கு முன்னர் பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் மிக நெருக்கமாக இருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களே தற்போது அரசுக்கு எதிரானவர்களாக முன்னிற்கின்றனர்.

அரசியல் அவதானிகளைப்பொறுத்தவரை தற்போதைய குழப்ப நிலைக்கு நிறைவேற்றதிகாரமே முக்கிய காரணம் என்பதைவிட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி தற்போது அரசியல் அனுபவமோ அல்லது பொருளாதார ரீதியான அனுபவமோ இல்லாத ஒருவரிடம் சென்றடைந்திருப்பதே முக்கிய காரணம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எது எப்படியிருந்த போதிலும் மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்று குறிப்பிடுமளவுக்கு அச்சக்தி நாளுக்கு நாள் அரசுக்கு எதிராக பலமடைந்து வருவதையும் இம்மாபெரும் சக்தி விரைவில் ஓர் அரசியல் சுனாமியாக ஆட்சியிலிருந்து விலக மறுக்கும் ஆட்சியாளரை புரட்டி எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிட முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
எதிர்பாராத உதவி கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.வாகனத்தை பழுது பார்க்கும் வகையில் செலவு ஏற்படும். இளைஞர்களுக்கு புதிய சிந்தனை மனதில் தோன்றும்.

**இடபம்**
பணிச்சுமை குறையும். புத்துணர்ச்சி அதிகரிக்கும். வீட்டில் ஒருவருக்கு தேவையான நகையை வாங்கி கொடுப்பீர்கள். இன்று நீங்கள் கலைத் துறையில் திறமையை வெளிப்படுத்தும் நாள்.

**மிதுனம்**
கிடப்பில் போட்டிருந்த வேலைகள் முடியும் நாள். யாரிடமும் கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள். அதுவே நல்லது. இன்று எது செய்தாலும் முழு கவனத்துடன் செய்வீர்கள்.

**கடகம்**
புதிய நபருக்கு உதவுவீர்கள். பிடிவாதத்தைக் கைவிடுவீர்கள்.குடும்ப ஒற்றுமை குறையும்படி நடந்துகொள்ள வேண்டாம்.ஆன்மிகத்தில் ஆர்வம் கூடும் நாள். நட்பு வட்டம் விரியும்.

**சிம்மம்**
உங்களுக்கு தேவையான உதவி ஒன்று கிடைகக்கும். சுபச்செலவு ஏற்படும். உங்களின் உதவியை பெற உயர்ந்த மனிதர் தேடி வருவார். நிதித்தேவை ஒன்று விரும்பியபடியே நிறைவடையும்.

**கன்னி**
நீங்கள் திட்டமிட்ட விஷயங்கள் இன்று நடைபெறும். உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களிடம் கடுமைகாட்ட வேண்டாம்.வேண்டியவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்**
சமூகத்தில் உங்களின் மரியாதை உயரும். பெருமிதம் கூடும்.நீங்கள் விரும்பிய புது வேலை கிடைக்கும். யோகமான நாள்.புது நட்பு மலரும். பேச்சுவார்த்தை நல்லபடியாக முடியும்

**விருச்சிகம்**
பகைமை ஒன்று உங்களது அனுசரிப்பினால் தீர்ந்துவிடும்.வேற்று மொழி பேசுபவரிடம் கவனமாக இருங்கள். அனுபவசாலியின் ஆலோசனை கிடைக்கும். உங்களின் தேவை நிறைவேறும்.

**தனுசு**
குடும்பத்தினரை அனுசரித்து செல்வது மிகவும் நல்லது.கூடுதலாக உழைப்பதன் மூலம் நல்ல பலனைப் பெறுவீர்கள். எதிர்பாராத சுபச்செலவு ஒன்று சந்தோஷம் தரும்.

**மகரம்**
நண்பர் ஒருவரின் உதவியால் பழைய பிரச்னை தீரும்.வெளியூரில் இருந்து நல்ல செய்தி வந்து உங்களை மகிழ்விக்கும். முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். கவலை தீரும்.

**கும்பம்**
பிரச்னை ஒன்று தீரும். எதிர்பாராத நன்மை மகிழ்ச்சி தரும்.வெளி மனிதர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். வரவுக்கு மீறி செலவு செய்யாதீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**மீனம்**
உங்களின் சிறு சிறு தவறுகளை மேலதிகாரி மன்னிப்பார். கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். நட்பு வட்டம் விரியும். புதிய இனங்களில் முதலீடு செய்வீர்கள். நிம்மதி கூடும்.

# தமிழினத்தை சாதி, மதத்தால் பிரிக்க சிலர் முயல்கின்றனர்!

## முதல்வர் ஸ்ராலின் பேச்சு

சென்னை, ஏப். 26

"தமிழ் இனத்தை சாதி, மதத்தால் பிரிக்க சிலர் முயற்சிக்கின்றனர்" என்று இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்ராலின் பேசினார்.

திருவான்மியூரில் நடந்த இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில்,

மதம் என்பதும், சமய நம்பிக்கை என்பதும், அவரவர் தனிப்பட்ட விருப்பம். ஆனால், அனைவரும் தமிழர் என்ற ஒற்றுமை உணர்வுடன் செயல்பட வேண்டும். அப்படி செயல்பட்டால் கிடைக்கும் நன்மைகள் அதிகம் பலமும் அதிகம்.

தமிழ் இனத்தை சாதி, மதத்தால் பிரிக்க சிலர் முயற்சிக்கின்றனர். அப்படி செய்தால், தமிழினத்தை அழிக்க முடியும் என்று நினைக்கின்றனர். நம்மை பிளவுபடுத்துவதன் வாயிலாக, நம் வளர்ச்சியை தடுக்கப் பார்க்கின்றனர். அதற்கு தமிழினம் பலியாகக் கூடாது. இதற்கு பின்னால் இருக்கும் சதியை உணர்ந்து, தெளிந்து புரிந்து கொள்ள வேண்டும்.



நாட்டில் அமைதி நிலவ வேண்டும். அமைதியான, நிம்மதியான நாடு தான் அனைத்து விதமான வளர்ச்சியையும் பெற முடியும். அத்தகைய வளர்ச்சிக்கான சூழலை, ஓராண்டு காலத்தில் நம் அரசு உருவாக்கி உள்ளது - என்றார். (ஐ)

# இலங்கையிலிருந்து வருவோரை அகதிகளாக அறிவிக்கவேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை

சென்னை, ஏப். 26

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இலங்கையிலிருந்து வருவோரை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என்று பா. மக. நிறுவுநர் ச. ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"இலங்கையில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு வாழ வழியில்லாத தமிழ் மக்கள், தஞ்சம் தேடி தமிழகத்திற்கு வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதேநேரத்தில் அவர்கள் அகதிகளாக மத்திய அரசால் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவர்களுக்கு உணவு, நிதி உள்ளிட்ட உதவிகளை சட்டபூர்வமாக தமிழக அரசால் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு கடைபிடித்து வந்த தவறான கொள்கைகளால் மீள முடியாத கடன் சுமையில் சிக்கித் தவித்து வருகிறது. இந்தியா பல்வேறு கட்டங்களாக இலங்கைக்கு உணவு மற்றும் எரிபொருள்களை கடனுக்கு வழங்கி வரும் போதிலும் அங்கு நிலைமை சீரடையவில்லை.

அதனால், இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்கள் தங்களின் உடமைகளை விட்டு விட்டோ, விற்று விட்டோ தஞ்சம் தேடி தமிழகத்திற்கு தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து இன்று (நேற்று) காலை 15 தமிழர்கள் தனுஷ்கோடிக்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களையும் சேர்த்து தமிழகத்துக்கு கடந்த சில வாரங்களில் தஞ்சம் தேடி வந்தவர்களின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 4 நாட்களில் மட்டும் மொத்தம் 33 பேர்



வந்துள்ளனர். அவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் உணவு உள்ளிட்ட உதவிகள் வழங்கப்படும்போதிலும், அவர்கள் கிட்டத்தட்ட கைதிகளைப் போலவே நடத்தப்படுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் மாதம் ரூ.1,500 நிதியுதவி உள்ளிட்ட பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை இப்போது தஞ்சம் தேடி வருவோருக்கும் வழங்க வேண்டும் தஞ்சம் தேடி வருபவர்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பது தான் பா. ம. கவின் நிலைப்பாடு.

இலங்கையில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டும், மனிதநேய அடிப்படையிலும் தஞ்சம் தேடி தமிழகத்துக்கு வரும் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். அதன்மூலம் அவர்களுக்கு சட்டபூர்வ உதவிகளை தமிழக அரசு வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்." - என்றுள்ளது. (ஐ)

# துணை வேந்தர்களை இனி தமிழக அரசே நியமிக்கும்!

## ஆளுநரின் அதிகாரம் பறிப்பு

சென்னை, ஏப். 26

தமிழ்நாட்டில் உள்ள 13 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை அரசே நியமிப்பது தொடர்பாக சட்ட முன் வடிவை உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அறிமுகம் செய்தார்.

சட்டசபையில் மசோதா குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும் போது கூறியதாவது:-

உயர்கல்வியில் மாநில அரசை மதிக்காமல் ஆளுநர் செயல்படும் போக்கு தலைதூக்கியிருக்கிறது இது மக்களாட்சியின் தத்துவத்துக்கே விரோதமாக உள்ளது.

துணைவேந்தர் நியமன அதிகாரம் ஆளுநரிடம் இருந்தால் அது சர்ச்சைக்கு வித்திடும் ஆளுநர் - மாநில அரசுக்கு இடையே அதிகார மோதலுக்கு வித்திடும்.

துணை வேந்தர்களை ஆளுநர் நியமிப்பதால் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் சில பிரச்னைகள் ஏற்படுகிறது. துணைவேந்தர்கள் நியமனத்தில் கவர்னர் தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறார். 13 பல்கலைக்கழகங்கள் வரலாற்று சிறப்புமிக்க பணிகளை ஆற்றி வருகின்றன.

பிரதமரின் சொந்த மாநிலமான குஜராத்தில், மாநில அரசு தான் துணைவேந்தரை நியமிக்கிறது இதே நிலை தான் கர்நாடகம், தெலங்கானாவிலும் உள்ளது என கூறினார்.

# சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்ப தயார்!

## சந்திரிகா அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஏப். 26

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரும், பொதுச்செயலாளரும் பதவி விலகினால் கட்சியைக் கட்டியெழுப்ப நான் தயார்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட போஷகர் பதவியில் நான் நீடிக்கின்றேன். என்னை எவரும் பதவி நீக்கம் செய்ய முடியாது. கட்சியில் உள்ள கள்வர்களை விரட்டினால், கட்சியைக் கட்டியெழுப்ப நான் தயார். தற்போதைய தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோர் கட்டாயம் பதவி விலக வேண்டும்” - என்றார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கம் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாத நிலையில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தனகல்ல - ஊராபொல பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குழுவினருக்கு உலர் உணவு வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# அரசைப் பதவி விலகுமாறு கோரி 5 நாள் பேரணி கண்டியிலிருந்து கொழும்புக்கு!

## ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் இன்று ஆரம்பம்

**கொழும்பு, ஏப். 26**

**பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கண்டியிலிருந்து கொழும்பிற்கு பேரணியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.**

‘ஐக்கிய மக்கள் பேரணி’ என்ற தொனிப்பொருளிலில் இந்த பேரணி நடைபெறவுள்ளது.

5 நாட்கள் தொடரவுள்ள இந்த பேரணி இன்று செவ்வாய்கிழமை கண்டியில் ஆரம்பமாகி 30 ஆம்திகதி சனிக்கிழமை கொழும்பில் நிறைவடையும். 5 கட்டங்களாக இந்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 26 ஆம் திகதி கண்டியிலிருந்து மாவனெல்ல வரையும், 27 ஆம் திகதி மாவனெல்லையிலிருந்து கலிகமுவ வரையும், 28 ஆம் திகதி கலிகமுவையிலிருந்து தனோவிட வரையும், 29 ஆம் திகதி தனோவிடவிலிருந்து யக்கலவரையும், 30 ஆம் திகதி யக்கலையிலிருந்து பேலியகொடை வரையும் பேரணி நடைபெறவுள்ளது.

பேரணி நிறைவடைந்த மறுநாள் மே மாதம் முதலாம் திகதி கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் இடம்பெறவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவில் உள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் இலங்கைக்கு நிதியுதவி

கொழும்பு, ஏப். 26

சீனாவிலுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் குழுவொன்று இலங்கைக்கு நிதியுதவியை வழங்கியுள்ளது.

ஹாங்சூ என்ற இடத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் குழுவினரே இவ்வாறு நன்கொடை வழங்கியுள்ளதாக இலங்கையில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

குறித்த நிதியானது இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கு உதவுமென நம்பப்படுவதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நிதியமைச்சர் அலி சப்ரிக்கு மனோ கணேசன் பாராட்டு

கொழும்பு, ஏப். 26

நெருக்கடி நிலையை சமாளிப்பதற்காக நிதி அமைச்சர் அலி சப்ரி மேற்கொண்டு வரும் பிரயத்தனத்தை தமிழ் முற்போக்கு முன்னணிதலைவர் மனோ கணேசன் பாராட்டியுள்ளார். அவருக்கு எதிர் ஆளும் கட்சி பேதங்கள் இல்லாமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,

நிதி அமைச்சர் அலி சப்ரி இடையில் வந்தவர். மக்கள் ஆணையில் அவர் நேரடியாக வரவில்லை. இன்று அவர் அவரால் இயன்றதை செய்கிறார். இன்று ஓடி ஒளிந்திருக்கும் பாவிகள், வாங்கிய கடன்களை சமாளிக்க இவர் பாவம், படாத பாடுபடுகிறார்.

கையில் காசில்லை. ஆகவே உடனடி நிதி நிவாரணம் வேண்டும். ஒட்டுமொத்த கடன்கள், மீள்செலுத்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு புதிய திகதி அட்டவணைப்படுத்தப்படவேண்டும். உள்நாட்டில் புதிய வரிக் கொள்கை மறுசீரமைக்கப்படவேண்டும்.

இவை மூன்றும் சப்ரி முன் உள்ள பிரதான சவால்கள். சொல்லொணா துயருறும் மக்கள் காக்கப்பட வேண்டும் என்பதற்காக, இவை தொடர்பில் எதிர்-ஆளும் கட்சி பேதங்கள் இல்லாமல் நாம் அவருடன் ஒத்துழைப்போம். அடுத்த வாரம் சப்ரியின் குழு நாடு திரும்பியதும் பாராளுமன்றக் கட்சிகளின் தெரிவுக்குழுவைச் சந்திப்பார்.

இடைக்கால ஆட்சி எல்லாம், இந்த அதிகார ஜனாதிபதியுடன் சரிவராது. ஆனால் நிதி அதிகாரத்தை பாராளுமன் றத்துக்கு நாம் இப்போது பிடுங்கி எடுக்க முயற்சிக்கிறோம்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)





# அத்தியாவசிய பொருட்களுக்கு மீண்டும் நிர்ணய விலைகள்!

கொழும்பு, ஏப். 26

அரிசி, கோதுமை மா, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு மீண்டும் நிர்ணய விலையை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நிதியமைச்சருடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால், அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலையை அறிமுகப்படுத்துவதில் பிரதான சவாலாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# மலையக ஆசிரியர்களும் சுகயீனப் போராட்டத்தில்!

கொழும்பு, ஏப். 26

அரசின் பொருளாதார கொள்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மேற்கொண்ட சுகயீன லீவுப் போராட்டத்துக்கு மலையக ஆசிரியர்களும் அதமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

நாட்டில் காணப்படும் எரிப்பொருள் பிரச்னை காரணமாக ஆசிரியர்கள் தொழிலுக்குச் செல்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். மேலும் அத்தியவசிய பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பல மணி நேரம் ஆசிரியர்கள் வரிசையில் நின்று அந்தப் பொருட்களை பெற்றுக் கொள்வதால் குறித்த நாட்களில் குறித்த நேரத்துக்கு பாடசாலைக்கு கடமைக்கு சமூகமளிக்க முடியாமை உட்பட பல்வேறு மன வேதனைக்கு ஆசிரியர்கள் உட்பட்டுள்ளனர்.

எனவே நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் ஆசிரியர்களான தம்மை சிறந்த மன நிலையுடன் கடமையாற்ற அரசு வழி செய்ய வேண்டும் என்று கோரியே இந்த ஒரு நாள் சுகயீன லீவுப் போராட்டத்தை நேற்று ஆசிரியர்கள் முன்னெடுத்தனர்.

இன்று மலையக பாடசாலைகள் மூடிய நிலையில் காணப்பட்டதுடன், ஆசிரியர்கள் அஞ்சல் அலுவலகங்களில் சுகயீன தந்திகளை பாடசாலைக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அதிபர், ஆசிரியர்களின் இந்த சுகயீன போராட்டம் தொடர்பான தகவல்களை அறியாத ஒரு சில மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து திரும்பிச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

நேற்றைய இந்த போராட்டத்துக்கு அதிபர், ஆசிரியர்கள் 100வீத ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாக ஆசிரிய தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. (அ)

# மருந்துப் பொருட்களின் விலை மிக உச்சத்தில்!

கொழும்பு, ஏப். 26

மருந்துப் பொருட்களின் விலை தற்போது பாரியளவில் அதிகரித்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் வைத்தியர் ஜி.ஜி சமல் சஞ்சீவ இதனைத் தெரிவித்தார்.


நாட்டில் அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டது.

எனினும், அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமையின் காரணமாக தற்போது மருந்துப்பொருட்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது.

இன்னும் 12 வாரங்களில் கையிருப்பில் உள்ள மருந்துப் பொருட்கள் நிறைவடையும் என்பதால் பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

சாதாரண மருந்துகளுக்குக் கூட 1,500 முதல் 2,000 ரூபா வரையில், செலவிட வேண்டியேற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஜி.ஜி. சமல் சஞ்சீவ குறிப்பிட்டார். (அ)

# நல்லூர்க் கந்தனிடம் அமெ. தூதர் வழிபாடு!



யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு நேற்று காலை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்டார்.

மதங்களுக்கிடையிலான ஒற்றுமை இலங்கையை இன்னும் சிறப்பாக்குவதாக நல்லூர் ஆலயத்தில் வழிபட்ட புகைப்படத்துடன் தனது ருவிட்டரில் அவர் பதிவிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் 107 வயது முதியவர் மரணம்!



யாழ்ப்பாணம், ஏப். 26

கரவெட்டியை சேர்ந்த 107 வயதான முதியவர் காலமாகியுள்ளார். கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் மிக வயதானவராக இவரே அடையாளம் காணப்பட்டிருந்தார்.

கரவெட்டி, கிழவிதோட்டம் பகுதியை சேர்ந்த க.இளையதம்பி என்பவரே உயிரிழந்தார்.

1915ஆம் ஆண்டு பிறந்த அவர், இலங்கை தமிழ் அரசு கட்சியின் உடுப்பிட்டி கிளைத் தலைவராகவும் செயற்பட்டார். (அ)

# சுயாதீன அணிகளுடன் சஜித் தரப்பினர் பேச்சு!

கொழும்பு, ஏப். 26

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசுக்கு எதிராக ஓரணியில் திரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அணிகளுக்கும் இடையில் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர், சுயாதீன அணிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்களை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு தயாராகிவரும் ஐக்கிய மக்கள் சக்தி, தற்போது அதற்கான ஆவணத்தில் கையொப்பம் திரட்டி வருகின்றது.

அப்பிரேரணையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் தமக்கு தெரியப்படுத்தப்படாததால், ஆதரவு வழங்கும் முடிவை எடுக்கவில்லை என சுதந்திரக்கட்சி உட்பட சுயாதீன அணிகள் அறிவித்தன.

பிரதமர் பதவி விலகி சர்வக்கட்சி அரசு அமைக்க இடமளிக்காவிட்டால், தாமும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர தயார் எனவும் குறிப்பிட்டன.

இந்நிலையிலேயே பிரேரணையின் உள்ளடக்கங்கள் பற்றியும், எதிரணிகளின் யோசனைகளையும் உள்வாங்கும் நடவடிக்கையை ஐக்கிய மக்கள்சக்தி ஆரம்பித்துள்ளது.(அ)

# அரசியல் நெருக்கடிக்கு நான் பொறுப்பு அல்லன்

## கூறுகிறார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஏப். 26

**“இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது.” - இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தான் பொறுப்பு அல்லன் என்றும் அவர் குறிப்பிட்டார்.**



அதேவேளை, அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கவேண்டிய நிலைமைக்குத் தான் காரணம் அல்லன் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ராஜபக்ஷ அரசு கூண்டோடு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன. அதனிடையே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடன் பதவி விலகி சர்வகட்சி அடங்கிய இடைக்கால அரசு அமைய வழிவிடவேண்டும் என்ற முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும எம்.பியின் கோரிக்கையும் ஆளும் கட்சிக்குள் பெரும் புயலாக மாறியுள்ளது.

இந்நிலையில், பிரதமர் பதவியில் தான் தொடர்ந்து நீடிப்பார் என்றும், இடைக்கால அரசு அமைந்தால்கூட அதுவும் தனது தலைமையிலேயே மலரும் என்றும் கடந்த சனிக்கிழமை திட்டவட்டமாக அறிவித்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று “இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது” என்று கூறியுள்ளார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு நேற்று முன்தினம் வழங்கிய குறுகிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”எனக்குப் பதவி ஆசை அல்ல. ஆனால், என்னைக் குறிவைத்து சிலர் ஏன் பதவி விலகக் கோருகின்றனர் என்று எனக்குப் புரியவில்லை. எனினும், அவர்களின் குறுகிய கால சுயலாப அரசியல் எனக்குப் புரிகின்றது.

இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. எனினும், தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு நான் பொறுப்பு அல்லன். அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கவேண்டிய நிலைமைக்கும் நான் காரணம் அல்ல.

மக்களின் துயரங்களை நான் புரிந்துகொள்கின்றேன். எப்போதும் மக்கள் பக்கமே நான் நிற்பேன். மக்களின் மனநிலையை அறிந்துதான் ஒவ்வொருகட்ட நடவடிக்கையையும் நான் எடுத்து வருகின்றேன்- என்றார். (அ)

# யானைத் தந்தத்தால் செய்த பெண் சிலையை இணையத்தில் விற்க முயன்ற நபர் கைதானார்

கொழும்பு, ஏப். 26

யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பெறுமதிமிக்க பெண்ணின் சிலையொன்றை இணையத்தில் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்த சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.

இவ்வாறு விற்பனை செய்ய முயன்ற நபர் இரத்தினபுரி பலாபத்தல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

11 அடி உயரமும் ஒன்றரை கிலோ நிறையும் உடைய யானைத் தந்தத்தால் செதுக்கப்பட்ட இச்சிலை மிகவும் விலை உயர்ந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சிலையை இணையத்தளத்தின் ஊடாக விற்பனை செய்ய சந்தேகநபர் முயற்சித்தபோது விசேட அதிரடிப் படையின் புலனாய்வு அதிகாரி ஒருவர் மாறுவேடம் பூண்டு இவ்வாறு கொள்வனவு செய்ய முயற்சித்த போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.



சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வவுனியாவிலும் ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்

வவுனியா, ஏப். 26

வவுனியா மாவட்ட அதிபர் ஆசிரியர்கள் நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் நேற்று ஆசிரியர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்ததோடு மாணவர்களின் வருகையும் மந்த நிலையில் இருந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட் களின் விலை உயர்வு மற்றும் அரசாங்கத்துக்கு எதிராகவே ஆசிரியர்கள் இந்த சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகயீன விடுமுறையை அறிவிப்பதற்காக ஆசிரியர்கள் தபால் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் நின்றிருந்தமையை காணக் கூடியதாக இருந்தது. (அ)








# விலைவாசி உயர்வை எதிர்த்து நேற்று வவுனியாவில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஏப். 26

விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நேற்று வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், எரிவாயுவுக்கு வரிசை, வரிபொருளுக்கு வரிசை, விவசாயிகளுக்கு பசளை இல்லை, ஊழல் நிறைந்தவர்களை வீட்டுக்கு அனுப்புவோம் போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர். (அ)

# அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 26

அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டுவருவது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தமக்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் நேற்று திங்கட்கிழமை உறுதி செய்தார்.

இந்நிலையில் அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் நோக்கில், அறிக்கையின் உள்ளடக்கங்கள் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)





# பொலிஸ் தடையை மீறி வீட்டுக்குள் நுழைந்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள்

## அமைச்சரின் வீடு சுற்றிவளைப்பு

கொழும்பு, ஏப். 26

வாரியபொல நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு பகுதியினர் இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத்தின் வீட்டை முற்றுகையிட்டதால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

சம்பவத்தின்போது இராஜாங்க அமைச்சர் வீட்டில் இருக்கவில்லை. பொலிஸார் வீட்டின் நுழைவாயிலில் தடுப்புக்களை அமைத்து போராட்டக்காரர்களைத் தடுத்தனர்.

எனினும், அதன் மேலாக ஏறிச்செல்ல போராட்டக்காரர்கள் முயற்சித்தனர். எனினும், பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை.

அமைச்சரின் வீடு அமைந்துள்ள காணியின் பிறிதொரு பகுதி வேலிக்குள் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வீட்டை நோக்கி ஓடினர். பின்னர் பொலிஸார் அவர்களை அப்புறப்படுத்தினர். (அ)

# கேலிக்கூத்தான வீதி தடைகள் மூலம் போராட்டங்களைத் தடுக்க முடியாது

## சஜித் பிரேமதாஸ அரசுக்கு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

**நிரந்தர வீதித் தடைகளை அகற்றுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



அரசாங்கம், தற்போது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களுக்கு எதிராக அழுத்தங்களையும் ஒடுக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

இந்த விடயம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், கொழும்பு கோட்டை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீதிகளை மறித்து நிரந்தர வீதித் தடைகளை இட்டுள்ளமை அதன் ஒரு செயற்பாடு எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

லோட்டஸ் வீதி முற்றாக மூடப்பட்டுள்ளமையால் வாகனங்கள் கொழும்புக்குள் பிரவேசிப்பதற்கு வேறு பாதைகளை பயன்படுத்த வேண்டியேற்பட்டுள்ளதாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கை நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் பல போராட்டப் பேரணிகள் முன்னெடுக்கப்படுவதால் அரசாங்கம் அச்சத்தில் இருப்பதுடன் இந்த கேலிக்கூத்தான வீதித் தடைகள் மூலம் மக்களின் போராட்டங்களை தடுக்கமுடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டின் அங்கத்தவர்களாகவுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டம் நடத்துவதற்கு இருக்கும் உரிமையை அரசாங்கமோ அல்லது வேறு எந்த சக்தியினாலும் மீற முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

சுமார் இரு வாரங்களுக்கு மேலாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை நான்கு சுவர்களுக்குள் அடைத்துவைப்பதற்கு மக்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# போதிய அளவு டீசல் கிடைத்தது ஆனால் பயணிகள் ஏறவில்லை!

## தத்தளிக்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள்

கொழும்பு, ஏப். 26

தனியார் பஸ்களை இயக்குவதற்கு போதியளவு டீசல் கிடைத்த போதிலும், கடந்த சில நாட்களாக பஸ்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன -

அண்மைய பஸ் கட்டண உயர்வு பஸ்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையில் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எங்களுக்கு டீசல் தட்டுப்பாடு இல்லை. தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இயக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

தொடரும் எதிர்ப்புக்கள் மற்றும் ஏனைய பிரச்னைகள் காரணமாக புத்தாண்டு விடுமுறைக்காக கொழும்பில் இருந்து சென்ற கணிசமானோர் இன்னும் நாடு திரும்பவில்லை.

ஒரே நேரத்தில் வருவாய் இழப்பு, செயல்பாட்டுச் செலவுகள் கடுமையாக அதிகரித்துள்ளதால் கடும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலைகளில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் காரணமாக இன்று வீதிகளில் மக்கள் மற்றும் பஸ்களின் எண்ணிக்கை குறையும்-என்றார். (அ)

# அரவிந்தகுமாரின் வீட்டுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 26

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக அண்மையில் பதவியேற்ற பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரின் வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

லிந்துலை- மெராயா பகுதியில் உள்ள அமைச்சரின் வீட்டுக்கு முன்பாக, பிரதேச இளைஞர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதால், இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார சிக்கல், பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட பல பிரச்னைகள் காணப்படும் நிலையில், இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் சுயநலமாக அமைச்சுப் பதவியை பெற்றுள்ளதாகவும், உடனடியாக பதவியிலிருந்து அவர் பதவி விலக வேண்டும் எனவும் தெரிவித்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

## நம்பிக்கையில்லா பிரேரணை;

# கோட்டாபய அரசுக்கு எதிராக வாக்களிக்க இ.தொ.கா முடிவு

கொழும்பு, ஏப். 26

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ருவிட்டர் பதிவொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான விரிவான கலந்துரையாடலுக்கு பின்னர், அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்க ஏகமனதாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ)

# ஜனநாயக ஆசிரியர் சங்கமும் போராட்டம்

கொழும்பு, ஏப். 26

அதிபர், ஆசிரியர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கமும், நான்கு கோரிக்கைகளை முன்வைத்து ஆதரவை வெளியிட்டது.

அதிபர், ஆசிரியர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு, பாடசாலை சீருடையில் செல்லும் மாணவர்களுக்கு அரைவாசி பஸ் கட்டணம் அறவீடு, மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைத்தல் உட்பட நான்கு கோரிக்கைகளே இவ்வாறு முன்வைக்கப்பட்டன. (அ)

ஈழநாடு



# டிரம்ப் முதல் போரிஸ் ஜான்சன் வரை: வெளிநாட்டு தலைவர்கள் குஜராத் செல்வது ஏன்?

- தேஜஸ் வைத்யா

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் சந்தித்து பேசினர்.

இந்த வார தொடக்கத்தில், ஜாம்நகரில் உலக சுகாதார நிறுவனத்தின் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையத்தின் திறப்பு விழாவில் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜூகந்நாத் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் ஆகியோரையும் குஜராத் வரவேற்று உபசரித்தது.

இதற்கு முன்பு அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் பிற தலைவர்களும் குஜராத் சென்றுள்ளனர்.

2014 முதல், பல நாடுகளின் பிரதமர்கள் மற்றும் அதிபர்கள் முன்னெப்போதும் இருந்திராத அளவில் குஜராத் சென்றுள்ளனர். அதற்கு முன் பிற நாடுகளின் தலைவர்கள் பெரும்பாலும் டெல்லிக்கு வருவார்கள் அல்லது ஒரு சுற்றுலாப் பயணியாக தாஜ்மஹாலை பார்க்கச் செல்வார்கள். சில சமயங்களில் மும்பை அல்லது சென்னை போன்ற பிற நகரங்களுக்குச் செல்வார்கள்.

### ஜின்பிங்கிலிருந்து போரிஸ் ஜான்சன் வரை - குஜராத் பயணம்

கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சீன அதிபர் ஷி ஜின்பிங் இந்தியா வந்தபோது, அவர் முதலில் அகமதாபாத்துக்கும் பின்னர் டெல்லிக்கும் சென்றார். 2017 ஆம் ஆண்டில், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே செப்ரெம்பர் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் அகமதாபாத்திற்கு பயணம் மேற்கொண்டார்.

2018இல், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யவும் அகமதாபாத்திற்குச் சென்றார். அதைத் தொடர்ந்து, டெல்லி.

2020 பெப்ரவரியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் அவரது மனைவியும் இரண்டு நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் முதலில் அகமதாபாத்தில் தரை இறங்கினர். அதைத் தொடர்ந்து ஆக்ரா மற்றும் டெல்லிக்கு சென்றனர்.

இப்போது, பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் அகமதாபாத்துக்கு சென்றிருக்கிறார்.

### பாரம்பரியத்தில் மாற்றம்

2014ஆம் ஆண்டுக்கு முந்தைய தலைவர்களின் வருகைகளைப் பார்த்தால், வெளிநாட்டுத் தலைவர்களின் பயணங்கள் பெரும்பாலும் தலைநகர் டெல்லியில்தான் நடக்கும் என்பது மரபு. மும்பை பொருளாதார தலைநகர் என்பதால் சில நாடுகளின் தலைவர்கள் அங்கும் செல்வார்கள்.

சில நேரங்களில் ஆனால் மிகவும் அரிதாக இந்த தலைவர்கள், மற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்னை அல்லது கொல்கத்தாவுக்கு செல்வார் கள். நாட்டின் உயர்மட்டத் தலைமையுடனான சந்திப்புகள் டெல்லியில் மட்டுமே நடக்கும்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. நரேந்திர மோடி பல நாடுகளின் தலைவர்களை குஜராத்திற்கு அழைத்து வருகிறார்.

வெளிநாட்டு தலைவர்களை கவரும் வகையில் சாலைகளில் பிரமாண்டமான வரவேற்பு, வண்ணமயமான நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2020ல் குஜராத் சென்றிருந்தபோது, "நமஸ்தே டிரம்ப்" நிகழ்ச்சி மொட்டேரா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதைத்தவிர விமான நிலையத்திலிருந்து விழா அரங்கம்வரை சாலையின் மார்க் கமும் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயின் இந்திய பயணமும் குஜராத்தில் இருந்து தொடங்கியது. அந்த நேரத்தில் குஜராத்தில் "50 ஜப்பானிய நிறுவனங்கள்" இருந்ததால், அவரது குஜராத் பயணம் "மிக முக்கியமானது" என்று நிபுணர்களால் விவரிக்கப்பட்டது.

சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் அவரது மனைவியும் 2014ஆம் ஆண்டு அகமதாபாத்துக்கு வந்தபோது, சபர்மதி நதிக்கரையில் நாட்டுப்புற நடனம் ஆடி கலைஞர்கள் அவர்களை வரவேற்றனர்.

### "முன்னெப்போதும் நடந்ததில்லை"

"இந்திய பிரதமர் ஒருவர், வெளிநாட்டு அதிபரையோ அல்லது பிரதமரையோ தனது சொந்த மாநிலத்தில் இதுபோல திரும்பத் திரும்ப அழைப்பது முன்னெப்போதும் நடந்ததில்லை," என்கிறார் டெல்லியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் வினோத் ஷர்மா. இருப்பினும், சில தலைவர்கள் சமீப காலங்களில் தலைநகர் டெல்லி மற்றும் நாட்டின் பிற பகுதிகளுக்கும் சென்றுள்ளனர்.

2021 ஒக்ரோபரில் டென்மார்க் பிரதமர் மாட் பிரடெரிக்சன் டெல்லிக்கு பயணம் மேற்கொண்டார்.

2020 பெப்ரவரியில், மியான்மர் அதிபர் யு வின் மிண்ட் டெல்லி மற்றும் ஆக்ராவுக்குச் சென்றார்.

இலங்கை, பூடான் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்கு வந்தனர். அவர்களும் டெல்லிக்கு வருகை தந்தனர். 2019 ஒக்ரோபரில், சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் பிரதமர் மோடி, தமிழ் நாட்டின் மாமல்ல புரத்தில் உள்ள யுனெஸ் கோவின் உலக பாரம்பரிய அங்கீகாரம் பெற்ற இடத்திற்கு சென்றனர்.

இத்தாலியின் பிரதமர் பாலோ ஜென்டிலோவும் 2017 ஒக்ரோபரில் டெல்லிக்கு வந்தார்.

ஒரு உலகத்தலைவர் குஜராத்துக்கு வருகிறார் என்றால், அதன் காரணம் என்னவாக இருக்கும்? நரேந்திர மோடி பிரதமராக இருந்தும் மற்ற மாநிலங்களை விட குஜராத் மாநிலத் திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்.







### குஜராத்தை வணிக மாதிரிக்காகவா?

குஜராத் முதலமைச்சராக இருந்தபோது நரேந்திர மோடி அந்த மாநிலத்தில் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் முன்னெடுப்புகளை தொடங்கி வைத்தார். இது உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து முதலீட்டாளர்களை ஈர்க்கிறது. குஜராத்தை "வணிக மாதிரி" மாநிலமாக பாஜக முன்வைக்கிறது.

"வெளிநாட்டு தலைவர்களின் குஜராத் பயணம், தொழில் துறைக்கு பெரும் பலனை அளித்துள்ளது. இன்று உலக வரைபடத்தில் குஜராத் முக்கிய இடம் பிடித்துள்ளது," என்கிறார் குஜராத் வர்த்தக மற்றும் தொழில்துறை தலைவர் ஹேமந்த் ஷா.

"வெளிநாட்டு விருந்தினர் வந்தால், அவர்கள் மாநிலத்தைப் பற்றி புரிந்துகொள்கிறார்கள். இது நீண்டகால பலன்களைக் கொண்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்து முதலீட்டுத் திட்டங்களை அவர்கள் உருவாக்குகிறார்கள்," என்று அவர் தெரிவித்தார்.

"பிரதமர் குஜராத்தைச் சேர்ந்தவர், குஜராத்திற்கு நன்மை ஏற்பட்டால், அது நல்லதுதான்."

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியரும், எழுத்தாளருமான கன்ஷியாம் ஷா இதை ஏற்கவில்லை.

நரேந்திர மோடி முதல்வராகவோ, பிரதமராகவோ இல்லாத நேரத்திலும், குஜராத்தில் அன்னிய முதலீடு இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அகமதாபாத் அதன் ஜவுளி ஆலைகளுக்கு பெயர் பெற்றது. குஜராத்தின் வணிக பிம்பம் பாஜக அரசை விட பழமையானது என்கிறார் ஷா.

### அரசியல் ஆதாயத்துக்காக பயணமா?

டொனால்ட் டிரம்ப், பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் ஷின்சோ அபே ஆகியோரின் வருகைகளின் போது ரோட்ஷோக்கள் நடத்தப்பட்டன. அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ரோட்ஷோக்களுக்காக சாலைகளில் கூடினர். இந்த நிகழ்ச்சிகளும் அப்போது விமர்சனங்களுக்கு உள்ளாயின.

இத்தகைய நிகழ்ச்சிகளை "அரசியல் ஆதாயம் பெறுவதற்கான முயற்சிகள்" என்று சில வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

டெல்லியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் வினோத் ஷர்மா, "கூட்டாட்சி அரசியலில் அனைவருக்கும் சமமான இடம் இருப்பதால், ஒரு மாநிலத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் கிடைத்தால் அது கேடு விளைவிக்கும்" என்கிறார்.

"நரேந்திர மோடி பிரதமரானபோது, "டீம் இந்தியா" என்று கூறினார். அணி என்று வரும்போது, எல்லா வீரர்களுக்கும் விளையாட வாய்ப்பு கிடைக்கும்," என்று அவர் மேலும் கூறினார்.

அன்னிய முதலீட்டை ஈர்க்க எந்தெந்த மாநிலங்களில் வளங்கள் உள்ளன என்பதை மத்திய அரசு கவனிக்க வேண்டும்.

எந்த மாநிலம் அதிக அளவு அந்நிய நேரடி முதலீட்டை கொண்டு வருகிறது என்பதில் மாநிலங்களுக்கு இடையே ஆக்கப்பூர்வமான போட்டியை உருவாக்குவது மத்திய அரசின் பொறுப்பாகும். அதற்கு எல்லா மாநிலத்திற்கும் சம வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

"ஒரு வெளியுறவு அமைச்சர் குஜராத்தில் சிறப்பு முதலீடு செய்ய விரும்புகிறார் அல்லது அவருக்கு அப்படி ஒரு உறுதிப்பாடு இருந்தால் அது வேறு விஷயம்."

"நரேந்திர மோடி அளவுக்கு வேறு எந்த பிரதமரும் தனது மாநிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததாக நான் நினைக்கவில்லை. இதில் இரண்டு விஷயங்களை நான் பார்க்கிறேன். மாநிலத்தின் மீதான பிரதமரின் பற்று. மற்றொன்று குஜராத் வசதியான உணர்வை அளிக்கிறது," என்று மூத்த குஜராத்தி பத்திரிக்கையாளர் ரமேஷ் ஓஜா குறிப்பிட்டார்.



ராஜபக்ஷ வீட்டின் மீது ஏறிய மாணவர்கள்

# குலுங்கிய கொழும்பு!

## நடந்தது என்ன?

- எம். மணிகண்டன்

சுமார் 10 அடி உயரம் கொண்ட சுற்றுச் சுவர் மீது ஏறிய மாணவர்கள் அரசுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகையை அதன் மீது கட்டி வைத்தனர். நுழைவு வாயிலில் கறுப்புத் துணிகளைத் தொங்க விட்டதுடன், சுற்றுச் சுவர் மீது அரசுக்கும், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் எதிரான வாசகங்களை எழுதினர். இந்தச் சம்பவத்தின்போது, ராஜபக்ஷ குடும்பத்தினர் யாரும் அந்த இல்லத்தில் இல்லை எனக் கருதப்படுகிறது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக நடைபெற்றுவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றவர்கள், நேற்று முன்தினம், ஞாயிற்றுக்கிழமை மாலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரப்பூர்வ இல்லத்தின் சுற்றுச் சுவர் மீது ஏறியதால் சுமார் ஒருமணி நேரம் வரை அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையும், காவல்துறையினரும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சுமார் 10 அடி உயரம் கொண்ட சுற்றுச் சுவர் மீது ஏறிய மாணவர்கள் அரசுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகையை அதன் மீது கட்டி வைத்தனர். நுழைவு வாயிலில் கறுப்புத் துணிகளைத் தொங்க விட்டதுடன், சுற்றுச் சுவர் மீது அரசுக்கும், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் எதிரான வாசகங்களை எழுதினர்.

இந்தச் சம்பவத்தின்போது, ராஜபக்ஷ குடும்பத்தினர் யாரும் அந்த இல்லத்தில் இல்லை எனக் கருதப்படுகிறது.

கொழும்பு மட்டுமல்லாமல், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் நீண்ட பேரணியாக கொழும்பு நகர வீதிகளில் வந்தனர். அவர்களில் ஒரு பிரிவினரே ராஜபக்ஷ இல்லத்தை முற்றுகையிட்டனர்.

கொழும்பு காலி முகத்திடலில் கடந்த 9-ஆம் திகதி தொடங்கி இரண்டு வாரங்களுக்கும் மேலாக நீடித்திருக்கும் போராட்டத்தில் பங்கேற்பதற்காக அவர்கள் சென்றனர்.



மாணவ, மாணவிகளின் பேரணி பல கிலோ மீற்றர் தொலைவுக்கு நீண்டிருந்தது.

போராட்டத்துக்கும், பேரணிக்கும் தடை விதிக்க வேண்டும் என்று அரசுத்தரப்பில் வைக்கப்பட்டிருந்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கெனவே நிராகரித்து விட்டது.

### முக்கிய வீதிகள் மூடல்



காலி முகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் மாணவர்களின் போராட்டத்துக்கு திட்டமிடப்பட்டிருந்தது. காலை முதலே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனால் கொழும்பு நகரம் முழுவதும் முக்கிய வீதிகளை காவல்துறையினர் மூடியிருந்தனர்.

நூற்றுக்கணக்கான காவல்துறையினரும், ராணுவத்தினரும், சிறப்பு அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். முக்கியமான இடங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 7 அடிக்கும் உயரமான தடுப்புகள் பல இடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

கண்ணீர்ப்புகைக் குண்டுகள், தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் வாகனம் என பல ஏற்பாடுகளை காவல்துறையினர் செய்திருந்தனர். எனினும் காவல்துறையினரின் தடுப்புகளைத் தாண்டி வெவ்வேறு வழிகளில் போராட்டக்காரர்கள் காலி முகத்திடலை வந்தடைந்தனர்.

கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டை ஆட்சி செய்தவர்கள் இன, மத, மொழி பேதம் காட்டி பிரித்து வைத்திருந்ததாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினார்கள்.

காலி முகத் திடலில் அமைந்திருக்கும் அதிபரின் அதிகாரப்பூர்வ அலுவலகத்தின் வாயில்தான் இந்தப் போராட்டத்தின் மையமாக அமைந்திருக்கிறது. போராட்டம் நடந்து வருவதால் கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக அதிபர் அலுவலகம் மூடப்பட்டிருக்கிறது.

வார நாள்களைவிட வார இறுதி நாள்களில் போராட்டத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஆயினும் ஞாயிற்றுக்கிழமையன்று பல நகரங்களில் இருந்தும் பல்கலைக்கழக மாணவர்கள் வந்ததால், இன்னும் கூடுதலாகவே போராட்டக்காரர்களின் எண்ணிக்கை இருந்தது.

"இதுவரை இலங்கையை ஆட்சி செய்தவர்கள் மக்களைப் பிரித்தார்கள். இனக் கலவரங்களைத் தூண்டி, மக்களை மோதவிட்டு ஆதாயம் பெற்றார்கள்" என போராட்டத்தில் ஈடுபட்ட செபஸ்டியன் மோகன்ராஜ் கூறினார்.

"நாட்டில் விலைவாசி கடுமையாக உயர்ந்திருப்பதால், பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் அத்தியாவசியப் பொருள்களை வாங்கவும் முடியாமல் மக்கள் துயரப்படுகிறார்கள்" என்று மலையகப் பகுதியில் இருந்து போராட்டத்தில் பங்கேற்க வந்திருந்த மற்றொரு போராட்டக் காரர் தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த பல வாரங்களாக விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாததால், கடன்களைச் செலுத்த முடியாது என அரசு அறிவித்திருக்கிறது. பெட்ரோல், எரிவாயு மண்ணெண்ணெய் உள்ளிட்டவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அரசும், அதிபரும் பதவி விலக வேண்டும் என்ற போராட்டக்கார்கள் மற்றும் எதிர்கட்சிகளின் கோரிக்கையை அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஏற்கவில்லை.

அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முயற்சி செய்து வருகிறார்.

ஆனால் "நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பேர் மீதும் நம்பிக்கையில்லை" என போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பலர் கூறினார்கள்.

[பிபிசி]

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் .......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ........................................................ குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................. (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ...................................

ii)  ...................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..............................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..................................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

## கல்வி tv CHANNEL-1

**26.04.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**26.04.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## டிஜிற்றல் மற்றும் நிகழ்நிலை கற்றல் நிலையத்துக்கு உதவி

மட்டக்களப்பு, ஏப். 26

அபயம் பவுண்டேசன் அமைப்பினால் பால்சேனை பாடசாலையில் அமைந்துள்ள டிஜிற்றல் மற்றும் நிகழ்நிலை கற்றல் நிலையத்துக்கு உயர் தொழிநுட்பத்துடனான நிழல் பிரதி இயந்திரம் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது.

குறித்த நிழல்பிரதி இயந்திரத்தை பாடசாலையின் அதிபர் உதயகுமாரிடம் அபயம் அமைப்பின் உறுப்பினரும் வைத்தியருமான தி.தவநேசன் கையளித்தார்.

கஸ்ட, அதிகஸ்ட பிரதேச மாணவர்களுக்கு மாதிரி பரீட்சைகள், செயலட்டைகள், குறிப்பேடுகள் போன்றவற்றை தயாரித்து வழங்கி அதன் மூலமாக கல்வியில் உயர் பெறுபேற்றை பெற வைப்பதனை நோக்காக கொண்டு இந்நிழல் பிரதி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கதிரவெளி பாடசாலையின் அதிபர் நாகேந்திரன், கண்டலடி பாடசாலையின் அதிபர் கருணைநாதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)





## அரசுக்கு எதிராக அம்பாறையில் ஞாயிறு இரவு தீப்பந்த போராட்டம்

அம்பாறை, ஏப். 26

மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசாங்கம் ஜனாதிபதிக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அம்பாறையில் போராட்டம் ஒன்றை நடத்தியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை, கல்முனை மாநகர ஐக்கிய சதுக்க முன்றலில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் தலைமையில் தீப்பந்தங்கள் ஏந்தியவாறு இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் கொள்ளைப் பணம் எங்கே?, அடுப்பு மூட்ட காஸ் இல்லை, நாட்டில் எதுவுமில்லை, பசில் வேண்டாம், மஹிந்த வேண்டாம், கோத்தாவே வெளியேறு, நாட்டில் மின்சாரம் இல்லை, பிள்ளைகள் குடிக்க பால்மா இல்லை, குழந்தைகள் படிக்க கரண்ட் இல்லை, பரீட்சை இல்லை, அரசே வீட்ட போ என்ற கோஷங்களை போராட்டகாரர்கள் எழுப்பினர்.

இதன்போது ஜே.வி.பியின் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ , தேசிய மக்கள் சக்தி பிரதேச அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)



ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு;

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி நடவடிக்கை பாதிப்பு

மட்டக்களப்பு, ஏப். 26

**நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்துவரும் பணி பகிஸ்கரிப்புப் போராட்டம் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.**

நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடி தீர்வைக் கோரி, அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், ஒன்றிணைந்த அதிபர்கள் சங்கம், ஆசிரிய ஆலோசகர்கள் சங்கம் உட்பட பல ஆசிரியர் சங்கங்கள் இணைந்து விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

ஆசிரியர்கள் வரவு குறைவாக இருந்த காரணத்தினால் மாணவர்கள் திரும்பிச் சென்றதையும் காண முடிந்ததுடன் சில பாடசாலைகளில் உயர் தரப்பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதையும் காணமுடிந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுப்பட்டு வருகின்றனர். இப்போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையிலும் இந்த அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் கிழக்கில் உழவுவேலைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஏப். 26

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான உழவுவேலைகள் ஆம்பமாகியுள்ளன. அதேவேளை அதற்கான செலவுகளும் பாரிய அளவில் அதிகரித்துள்ளன.

உழவு வேலைக்கென எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைவாக பிரத்தியேக வரிசையில் வைத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் நிரப்பப்படுகின்றன.

அதேவேளை, உழவு வேலைகளுக்கான கூலிகளும் பரவலாக அதிகரித்துள்ளன.

ஒரு ஏக்கர் உழவுவதற்கு உழவு இயந்திரத்திற்கான கூலி 6000 ரூபாவிலிருந்து 12000 ரூபாவாக அதிகரித்துள்ளது.1 லீற்றர் டீசல் 340 ரூபாவாக அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம்.பல உழவு இயந்திர காரர்கள் டீசல் பிரச்னையால் உழவமுடியாது என்கிறார்கள். அதனால் இன்னும் உழவமுடியாது பல விவசாயிகள் திண்டாட்டத்திலுள்ளனர்.

மேலும் விதைப்பதற்கான கூலி 1500 ரூபாவிலிருந்து 2000 ரூபாவாக அதிகரித்துள்ள அதேவேளை, வரம்பு கட்டுவதற்கான கூலி 2000 ரூபாவிலிருந்து 2500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

1 புசல் விதைநெல்லுக்கு 1000 ரூபாவால் கூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த தடவையைப்போல இரசாயனப் பசளை இம்முறையும் கிடைக்கவில்லை. எனினும் கடந்த தடவை



கள்ளச்சந்தையில் 1 மூடை யூரியா 35ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டது. யூரியா இட்டு நெற்செய்கை யிலீடுபட்டவர்களுக்கு விளைச்சல் அதிகமாகவிருந்தது. கூடவே நெல்லின் விலையும் அதிகரித்தமையினால் கூடிய இலாபம் பெற்றனர். ஆனால் யூரியா இம்முறை 50ஆயிரம் ருபா வரை செல்கிறது. அதற்கும் யூறியா இல்லையென பழக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## கிழக்கில் 10,000 ஆதரவற்ற குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குகிறது சீனா!

திருமலை, ஏப். 26

கிழக்கில் 10,000 ஆதரவற்ற குடும்பங்களுக்கு 1 மில்லியன் யுவான் பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு சீனாவின் யுனான் மாகாண அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தபோது தூதுவர் குய் சென் ஹொங் இதனை தெரிவித்தார்.



இந்த சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளில் சீன முதலீட்டை எதிர்பார்ப்பதாக ஆளுநர் அழைப்பும் விடுத்துள்ளார்.

முன்னதாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள தமிழர்களுக்கு அத்தியாவசிய மற்றும் மருந்து பொருட்களை அனுப்ப மத்திய அரசிடம் தமிழக அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. (அ)

## பாரவூர்தி மோதியமையால் பழமையான மரம் முறிவு

மட்டக்களப்பு, ஏப். 26

பழமை வாய்ந்த மரம் மீது பாரவூர்தி மோதியதில் அந்த மரம் முறிந்து நடுவீதியிலேயே விழுந்தமையால், அந்த வீதியின் ஊடான போக்குவரத்து இரு மணி நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் தாளங்குடா சந்தியில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி போக்கு வரத்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து மரத்தை அறுத்து வீதிப்போக்குவரத்தை சீர் செய்தனர்.

குறித்த பிரதேசத்தில் மரம் விழுந்து மின்கம்பங்கள் அறுந்து விழுந்தமையால் மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்கள் பழைமை வாய்ந்த இம்மரம் பிரதேசத்தின் அடையாளமாகக் காணப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர். (அ)

# இரண்டு நாட்களாக இரு பிரிவு மோதல்!

## சூடானில் பயங்கரம்

*கார்டூம்,ஏப்.26*

சூடானில் இரு தரப்பின ருக்கு இடையே இடம்பெற்ற மோதலில் 168 பேர் பலியாகியதுடன் 98 பேர் படுகாயம் அடைந்தனர்.

வடகிழக்கு ஆபிரிக்காவில் சூடான் அமைந்துள் ளது. இந்நாட்டில் 2003ஆம் ஆண்டு முதல் டர்பர் மாகாணத்தை மையமாகக் கொண்டு உள்நாட்டுப்போர் நிலவி வந்தது.

டர்பர் மாகா ணத்தின் பெரும் பகுதிகளை தம்வசம் வைத்துள்ள சூடான் அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்தது.



இந்நிலையில் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற மோதலில் 168 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் இந்த மோதலில் 98-க்கும் மேற்பட்டோர் படுகாயம டைந்தனர்.

# பிரான்ஸ் ஜனாதிபதியாக மக்ரோன் இரண்டாவது முறையும் வெற்றி!


பாரிஸ், ஏப்.26

**பிரான்ஸ் ஜனாதிபதித்தேர்தலில் இம்மானுவல் மக்ரோன் வெற்றி பெற்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதியானார்.**

பிரான்ஸ் ஜனாதிபதி த் தேர்தலின் முதல் கட்டம் கடந்த 10ஆம்திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் மக்ரோன் உட்பட மொத்தம் 12 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

இம்மானுவல் மக்ரோனுக்கும், தீவிர வலது சாரி வேட்பாளர் மரைன் லுா பென்னுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முதல் சுற்றுத்தேர்தலில் எந்த வேட்பாளரும் பெரும் பான்மை வாக்குகளைப்பெறவில்லை.

இதனால் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரான்ஸ் ஜனாதிபதித்தேர்தலின் இரண்டாம் கட்டத்தில் விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கையில் மக்ரோன் 58.2 சதவீதம் வாக்குகள் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகினார். அவரை எதிர்த்துப் பொட்டியிட்ட லுா பென் 42 வீத வாக்குகளைப் பெற்றார்.



இந்நிலையில் இரண்டாவது முறை ஜனாதிபதியாக மீண்டும் தேர்வு செய்யப் பட்டதை அறிந்த இம்மானுவல் மக்ரோன் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

# ரஷ்ய படைகளால் முற்றுகைக்குள்ளான இரும்பு ஆலைக்குள் பொது மக்கள்!

## அவர்களைக் காப்பாற்ற போர்நிறுத்தத்துக்கு வலியுறுத்து!

*கீவ்,ஏப்.26*

உக்ரைன் வெள்ளைக் கொடியை ஏற்றுவதன் மூலம் போர்நிறுத்தத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைனின் மரியுபோல் நகரில் தங்களால் முற்றுகையிடப்பட்டுள்ள, அஸோவ்ஸ்டல் இரும்பு ஆலையில் பதுங்கியுள்ள உக்ரைன் படையினர் வெள்ளைக்கொடியை ஏற்றுவதன் மூலம் போர் நிறுத்தத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றும் ஆலையிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்காக போர்நிறுத்தம் மேற்கொள்ளத்தயாராக இருப்பதாக கூறியுள்ள



ரஷ்யா இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது.

# இந்தியாவின் உணவு ஏற்றுமதி சிரமங்களுக்கு விரைவில் தீர்வு!

## உலக வர்த்தக அமைப்பு உறுதி

*வாஷிங்டன், ஏப்.26*

இந்தியாவிலிருந்து உலக நாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று உலக வர்த்தக அமைப்பு தெரிவித்துள்ளது.

உக்ரைன் இடையிலான போர் காரணமாக பல நாடுகளில் உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இத்தகைய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து உணவு தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு உலக வர்த்தக நிறுவனத்தின் விதி முறைகள் தடையாக உள்ளன. குறைந்த பட்ச ஆதரவு விலையில், உணவு



தானியங்களை கொள்முதல் செய்வது மற்றும் ஏற்றுமதி செய்வதில் பிரச்சினைகள் உள்ளன. இவற்றையெல்லாம் முறியடித்து விரைவில் தீர்வு காணப்படும் என்று உலக வர்த்தக அமைப்பு உறுதியளித்துள்ளது.

# இஸ்ரேலின் அழைப்பை ஏற்றுக்கொண்ட பைடன்!

*ஜெருசலேம்,ஏப்.26*

இஸ்ரேலுக்கு வருகை தருமாறு அந்நாட்டின் பிரதமர் நாப்தலி பென்னட் விடுத்த அழைப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஏற்றுக்கொண்டார்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் "எதிர்வரும் மாதங்களில் இஸ்ரேலுக்கு வர விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.



இதனையடுத்து பிரதமர் நாப்தலி பென்னட் விடுத்த அழைப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஏற்றுக்கொண்டார்" என்பது உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டது.

# உலகளவில் கொரோனாவின் வீரியம் குறைந்து வருகிறது

*வாஷிங்டன், ஏப்.26*

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 46 கோடியே 20 இலட்சத்து 8 ஆயிரத்து 291 பேர் குணமடைந்துள்ளனர்.

சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 226 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.



இந்நிலையில் வைரஸ் பாதிக்கப்பட்ட வர்களில் 4 கோடியே 12 லட்சத்து 17 ஆயிரத்து 84 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 46 கோடியே 20 லட்சத்து 8 ஆயிரத்து 291 பேர் குணமடைந்துள்ளனர்.

# கொத்தாய் பரவும் கொரோனா: முறியடிப்பதில் சீனா மும்முரம்!



*பீஜிங்,ஏப்.26*

சீனாவின் பொருளாதார தலைநகர் என்ற பெருமைக்குரிய ஷாங்காய் நகரில்தான் அறிகுறியற்ற கொரோனா பரவல் அதிகமாக உள்ளது.

இதனால் கொத்து கொத்தாக கொரோனா பரவுவதைத் தடுக்க அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில் அங்கு ஷாங்காய் நகரில் ஒரே நாளில் 39 பேர் தொற்றால் பலியாகியுள்ளனர்.

சீனாவின் வுகான் நகரம் தான் கொரோனா வைரஸ் பெருந்தொற்றை உலகுக்கு வழங்கியது. இன்றைக்கு அதே சீனா மைக்ரான் மற்றும் அதன் துணை வைரஸ்களால் தூண்டப்பட்ட கொரோனா அலையில் சிக்கியுள்ளது.

இந்த நகரம் கொரோனா தொற்றின் மையமாக உள்ளது. இதனை முற்றிலும் இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் சீன அரசு ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



### ராகுல் அதிரடி சதம்:

# லக்னோ அபார வெற்றி: வெளியேறியது மும்பை!

மும்பை, ஏப். 26

அணித் தலைவர் கே. எல். ராகுலின் அற்புதமான சதம் கைகொடுக்க 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வெற்றி கொண்டது லக்னோ அணி. தொடர்ச்சியாக எட்டாவது தோல்வியை சந்தித்த மும்பை அணி இறுதிச் சுற்று வாய்ப்பை (பிளே ஓவ்) இழந்து வெளியேறியது.

மும்பையில் நேற்று முன்தினம் இரவு நடந்த 37ஆவது போட்டியில் மும்பை இந்தியன் லக்னோ சுப்பர் ஜியாண்ட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.




துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக், கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. குயின்ரன் டி கொக் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், மறுமுனையில் ராகுல் உறுதியாக நின்று அதிரடி காட்டினார். அடுத்து வந்த மனிஸ் பாண்டே ராகுலுக்கு உறுதுணையாக நிதானமாக ஆடினார். இணைப்பாட்டமாக 58 ஓட்டங்களை இவர்கள் பெற்ற நிலையில் 22 ஓட்டங்களுடன் மனிஸ் ஆட்டமிழந்தார்.

ராகுல் தொடர்ந்து அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும், மறுமுனையில் ஸ்ரொய்னிஸ் 0, குர்னல் பாண்ட்யா 1, தீபக் ஹூடா 10 என் விக்கெட்களை பறிகொடுத்தனர். ஒரு புறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும் மறு முனையில் அதிரடி காட்டிய ராகுல் உனாகட்டின் 18ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 3 பௌண்ட்ரிகளை விளாசினார். அடுத்து மெரடித் வீசிய பந்தில் சிக்ஸர் அடித்தவர் இந்தத் தொடரில் இரண்டாவது சதத்தை பதிவு செய்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது லக்னோ அணி.

கே. எல். ராகுல் 62 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 12 பௌண்ட்ரிகளுடன் 103 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மும்பை இந்தியன்ஸின் பந்துவீச்சில் கிரன் பொலார்ட், மெரடித் தலா இரு விக்கெட்களையும், சாம்ஸ், பும்ரா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சற்று சவாலான இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இஷான் கிஷன் 8 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். அடுத்து வந்த பிரேவிஸ் 3, சூரியகுமார் யாதவ் 7 என ஆட்டமிழக்க மறுமுனையில் ரோஹித் சர்மா சற்று நம்பிக்கை ஏற்படுத்தினார்.

நான்காவது விக்கெட்டுக்காக களமிறங்கிய திலக் வர்மாவும் நம்பிக்கை கொடுத்தபோதும், 39 ஓட்டங்களுடன் ரோஹித் சர்மா ஆட்டமிழக்கவே மும்பையின் நம்பிக்கை தளரத் தொடங்கியது. கிரன் பொலாட் சற்று ஆறுதல் கொடுத்தாலும், மும்பையால் வெற்றி கோட்டை தொட முடியாத நிலையே எழுந்தது.

இறுதியில், 20 ஓவர்கள் நிறைவில் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது.

லக்னோவின் பந்துவீச்சில் குர்ணல் பாண்ட்யா 3 விக்கெட்களை சாய்த்தார். போட்டியின் நாயகனாக ராகுல் தெரிவானார். (ஐ)

# சென்னை அணியின் நான்காவது வீரர் யார்?

சென்னை, ஏப். 26

நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இதுவரை 7 போட்டிகளில் விளையாடி 2 வெற்றிகளைப் பெற்றுள்ளது. புள்ளிகள் பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளது.

சென்னை அணியின் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக இருப்பது 4ஆவது வெளிநாட்டு வீரர் யார்?

பிராவோவைத் தவிர ஆரம்பத்தில் வேறு எந்த வெளிநாட்டு வீரரும் சென்னை அணிக்குப் பெரிதாக உதவவில்லை. ஆனால், நாளடைவில் இலங்கையின் சுழல்பந்து வீச்சாளர் மஹேஷ் தீக்ஷனவும் பிரிடோரியஸூம் நன்றாக விளையாடி தங்களுடைய இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

நடுவில் ஜோர்தானுக்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்து ஏமாந்தது சென்னை.

மொயின் அலியை 8 கோடி இந்திய ரூபாய்க்கு தக்கவைத்தது சென்னை. ஆனால், 5 போட்டிகளில் விளையாடி அதிக பட்சமாக 48 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார் மொயின் அலி. 3 போட்டிகளில் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் சென்னை அணி நெருக்கடிக்கு ஆளாகியது. சுழல்பந்துவீச்சில் இதுவரை ஒரு விக்கெட்டும் எடுக்கவில்லை.

இதனால்தான் மும்பைக்கு எதிராகக் கடைசியாக விளையாடிய ஆட்டத்தில் மிட்செல் சான்ட்னரைத் தெரிவு செய்தது சென்னை. இனி வரும் ஆட்டங்களிலும் சான்ட்னரையே சென்னை தெரிவு செய்யுமா அல்லது மொயின் அலிக்கு மேலும் வாய்ப்புகள் வழங்குமா என்பது பெரிய கேள்வியாக உள்ளது.

இனி வரும் வாரங்களில் மும்பை, புனே ஆடுகளங்கள் சுழல் பந்து வீச்சுக்குச் சாதகமாக மாறும் என்பதால் சான்ட்னரைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகவே தெரிகிறது. எனினும் மொயின் அலி போன்ற ஒரு திறமைசாலியை அவ்வளவு சுலபமாக ஒதுக்கித் தள்ள முடியுமா? என்பதும் முக்கியமானது.




# சதத்தில் ராகுல் புதிய சாதனை!

மும்பை, ஏப். 26



இருபது - 20 போட்டியில் அதிக சதங்கள் அடித்த இந்திய வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் ரோஹித் சர்மாவுடன் கே. எல். ராகுலும் இணைந்துள்ளார்.

மும்பைக்கு எதிரான போட்டியில் ராகுல் சதம் அடித்திருந்தார். இது அவரின் 6ஆவது இருபது - 20 சதமாக அமைந்தது. இதையடுத்தே இருபது - 20 போட்டியில் அதிக சதங்கள் அடித்த இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இது தவிர, இந்தமுறை ஐ. பி. எல். தொடரில் இரு சதங்களை அடித்த ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்த அதே சமயம் ஐ. பி. எல். தொடரில் அதிக சதங்கள் அடித்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது வீரர் (முதலிடத்தில் விராட் கோலி 5 சதங்களுடன் உள்ளார்) என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். (ஐ)

# ஜேர்மனியின் தேசிய கிண்ணம் சம்பியனாகிறது பேயர்ன் முனீச்!

பேர்ளின், ஏப். 26

ஜேர்மனியின் தேசிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பேயர்ன் முனீச் 10 ஆவது முறையாக சம்பியனாகி சாதனை படைக்கவுள்ளது.

போருசியா டார்ட்மண்ட் அணியை சனிக்கிழமை நள்ளிரவு ஆட்டத்தில் வென்ற (3-1) பேயர்ன் முனீச், பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலிடத்தை உறுதி செய்து கொண்டது. நடப்பு சீசனில் இன்னும் 3 ஆட்டங்களே எஞ்சியிருக்கும் நிலையில், 2ஆம் இடத்திலிருக்கும் டார்ட்மண்ட் 12 புள்ளிகள் பின் தங்கியிருக்கிறது.



இதனால் பேயர்ன் முனீச் பட்டத்தை வெல்வது உறுதியானது. இந்த ஆட்டத்தில் பேயர்ன் முனீச்சுக்காக செர்கே நர்பி (15’), ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி (34’), ஜமால் முசியாலா (83’) ஆகியோரும், டார்ட்மண்டுக்காக எம்ரே கேனும் (52’) கோலடித்தனர்.

பேயர்ன் முனீச் தொடர்ந்து 10ஆவது முறையாக கோப்பை வெல்ல இருப்பது, ஐரோப்பிய முதல் 5 லீக் போட்டிகளில் சாதனையாகும்.

# புரட்சிகரமான மாற்றத்துக்கு அரசு செவிசாய்க்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



கொழும்பு, ஏப். 26

**மக்கள் கோரும் புரட்சிகரமான மாற்றத்துக்கு அரசு செவிசாய்க்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கையில் எதிர்வரும் காலங்களில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என்றும் அவர் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருளுக்காக வழங்கப்பட்ட இந்தியக் கடன் வசதி மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒரு பில்லியன் டொலர் கடன் திட் டம் முதல் வாரத்தில் முடி வடைவதால் அடுத்த மாதம் இலங்கை பாரிய பிரச்னையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தனியார் வங்கியாளர்கள் குழுவுடனான கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசு உடனடியாகப் பதவி விலகுமாறு கோரி இளைஞர்கள் உட்பட பொதுமக்கள் வீதியில் இறங்கியபோதிலும் பாராளுமன்றம் உரிய தீர்வை வழங்கத் தவறியுள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)



# வடக்கு மாகாண அபிவிருத்தி குறித்து ஆளுநருடன் அமெ. தூதுவர் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு மாகாணத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு எவ்வாறு தொடர்ந்து ஆதரவளிப்பது என்பது குறித்து மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை நேற்று சந்தித்த போது ஆராய்ந்ததாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இலங்கை முழுவதுக்குமான நிலையான முதலீட்டை ஈர்ப்பது மற்றும் பொருளாதார வாய்ப்பை ஊக்குவிப்பது அமெரிக்காவின் முன்னுரிமையாகும் எனவும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க தூதுவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறார். அதன் ஒரு அங்கமாகவே வடக்கு மாகாண ஆளுநரை அவர் நேற்று சந்தித்துப் பேசினார். (அ)

# கப்பம் கோரிய நால்வர் கைது

கொழும்பு, ஏப். 26

நீர்கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பில் டி- 56 ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வியாபாரி ஒருவர் கப்பம் வழங்காததால், அவரை படுகொலை செய்ய குழு ஒன்று திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், வெளிநாடு ஒன்றில் மறைந்திருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 32,37,38 மற்றும் 42 வயதுடைய மினுவாங் கொடை மற்றும் கொட்டு கொடை பிரதேசத்தை சேர்ந்த வர்கள் என பொலிஸார் கூறினர். (அ)

# புதிய வாகனத்தை பெறும் வாய்ப்பை நிராகரித்த கணக்காய்வாளர்நாயகம்

## அரச ஊழியர்களுக்கு முன்னுதாரணம்

கொழும்பு, ஏப். 26

மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபா வாடகைக்கு வாகனம் பெற அனுமதிக்கப்பட்ட போதும், கணக்காய்வாளர் நாயகம் சலந்த விக்ரமரத்ன அந்த வாய்ப்பை நிராகரித்துள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது.

எனினும், நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளவேளையில் அரச அதிகாரிகள் முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வாய்ப்பை அவர் பயன்படுத்தவில்லை.

நிறுவனத்துக்கு சொந்தமான பழைய வாகனத்தை அவர் தனது கடமைகளுக்கு பயன்படுத்தி அனைத்து அரச ஊழியர்களுக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறார் என கூறப்பட்டது. (அ)

# கொழும்பு பங்குச் சந்தையின் பரிவர்த்தனை இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 26

கொழும்பு பங்குச் சந்தையின் நாளாந்த பங்குச் சந்தை பரிவர்த்தனை நேற்று முழுமையாக இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஞஸ்ரீ ஞடு20 சுட்டெண் 10 வீதத்தைவிட குறைந்ததன் காரணமாக பங்குச் சந்தை பரிவர்த்தனை நடவடிக்கைகள் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டது.

ஏற்கனவே, பங்குச் சந்தையின் நாளாந்த பங்குச் சந்தை பரிவர்த்தனை முற்பகல் 10.31 மணிக்கு நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் மீண்டும் முற்பகல் 11.01 மணிக்கு பங்குச் சந்தை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. (அ)

# உணவு, மருந்துக்காக இந்தியா வழங்கிய கடன் தொகையில் இரும்பு கொள்வனவா?

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களான உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதற்காக இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் டொலர் கடன் தொகையில், இரும்பு கொள்வனவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் குழு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு தற்போது பல தரப்பிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதாக தெரியவருகிறது.

இந்த ஒப்பந்தத்தின் பின்னணியில் அரசுக்கு ஆதரவான பலர் இருப்பதாக தெரியவருகிறது.

இந்த கடன் தொகையில் ஏற்கனவே 250 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டுள்ளதோடு, தற்போது 750 மில்லியன் டொலர்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# அமெரிக்கத் தூதுவர் யாழ்.ஆயருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையை சந்தித்தார்.

அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக யாழ். ஆயர். ஜஸ்டின் ஞானப் பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

அதேநேரம், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று காலை நல்லூர் ஆலயத்திலும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், பல தரப் பினரை சந்தித்துக் கலந்துரையாடினார். (அ)

# இலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் 1989 ஜேர்மன் ஒன்றிணைந்ததை நினைவுபடுத்துகிறது

## கூறுகிறார் ஜேர்மன் தூதுவர்

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் அமைதியான போராட்டங்களால் தான் ஈர்க்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹோல்கர் சீபர்ட் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் 'இலங்கையின் மதிப்புமிக்க மக்கள் தங்கள் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை எவ்வளவு அமைதியான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதில் நான் ஈர்க்கப்பட்டேன்.

1989இல் ஜேர்மன் ஒன்றிணைந்ததை அது நினைவு படுத்துகிறது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் அமைதியாக இருக்க வலிமை பெற வாழ்த்துகிறேன்' என பதிவிட்டுள்ளார். (அ)

## தமிழர்களுக்கு...

நிதிகள் சந்தித்துப் பேசினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்த சந்திப்பு சுமார் 2 மணி நேரம் நீடித்தது.

இந்த சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் -

"தமிழ் மக்கள் இன்று முகம்கொடுக்கின்ற விடயங்களையும், நாடு இன்று இருக்கின்ற நிலைமை தொடர்பாகவும் அவர் எங்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்காக ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் பேரவையில் அவர்கள் கடந்த காலங்களில் பல முயற்சிகளை எடுத்திருந்திருந்தனர். தற்போது அவர்கள் மீண்டும் வந்திருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்காக ஒரு நியாயமான தீர்வுக்கு தொடர்ந்தும் முயற்சிகள் எடுத்து, முழுமையான ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும் என அவரை நாங்கள் கேட்டுக்கொண்டுள்ளோம்.

தங்களால் இயன்றளவுக்கு தமிழ் மக்களின் தீர்வுக்கு முயற்சிகளை எடுக்கிறோம் என்று அமெரிக்க தூதுவர் உறுதியளித்தார் - என்றார்.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்கள் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## 21ஆம்திருத்த...

அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன், இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்ட முன்மொழிவுகளை நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்திருந்தார். (ஐ)

## ஆறு...

முட்டுக்கட்டை நிலையை முடிவுக்கு கொண்டுவருவதற்காக அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

தனது யோசனைகளை கடிதமொன்றில் தெரியப்படுத்தியுள்ள முன்னாள் பிரதமர், "நான் பல கலந்துரையாடல்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட பின்னர் ஆழ்ந்த யோசனைக்கு பின்னர், காலி முகத்திடலில் உள்ள இளைஞர்கள் பெரியவர்களின் கோரிக்கைகளை - மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் சமூகத்தின் பல துறை தலைவர்களின் கோரிக்கைகளை கருத்திற்கொள்ளும் முன்மொழிவை முன்வைத்துள்ளேன்.

இடைக்கால அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான யோசனைகளை முன் வைக்கவேண்டும்.

தேசிய கொள்கைகளுக்கான அரச பேரவையை ஏற்படுத்தவேண்டும் . கொள்கைகளை வகுப்பது நடைமுறைப் படுத்துவது உட்பட அனைத்து விடயங்களிலும் அமைச்சரவை தேசிய கொள்கைகளுக்கான அரச பேரவையை கருத்தில் கொள்ளவேண்டும்" எனவும் கூறியுள்ளார். (அ)

## இடைக்கால...

நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுப்பிவைத்துள்ளார். அதில், 20ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு பாராளுமன்றம் தீர்மானித்தால் அதற்கு ஆதரவளிக்க தாம் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வாக ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சி தலைவர் மற்றும் அனைத்துக் கட்சி தலைவர்களின் முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துமாறு மகாநாயக்க தேரர்கள் கடந்த வாரம் வலியுறுத்தியிருந்தனர். அவ்வாறு நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்காவிடின் "மகாசங்கத்தை கூட்டி" முடிவு எடுப்போம் என்று அவர்கள் கடுந்தொனியில் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாணய...

அடிப்படையாகக் கொண்டிருக்காது என்றும் யார் ஆட்சியில் இருந்தாலும் சீனாவின் ஆதரவு இலங்கை மக்களுக்கே எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சீனா கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான, 730,000 மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளது.

அத்துடன், மொத்தமாக 12 கப்பல்களுக்கான கட்டணமாக, 390 மில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ள நிலையில், அதில் 7 கப்பல்களுக்கு மாத்திரம் கட்டணம் செலுத்தப் பட்டுள்ளதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார். (அ)

## இடைக்கால அரசினால்...

குறிப்பாக, காலி முகத்திடலில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணியிலிருந்து விலகிய 40 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக தனியார் வானொலி ஒன்றுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவித்தபோது, இடைக்கால அரசு அமைக்கும் கோரிக்கையை நிராகரித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

வெவ்வேறு கொள்கைகள் உள்ளவர்கள் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ள விரும்பாதபோது, இடைக்கால அரசால் என்ன பலன் ஏற்படும்? இடைக்கால அரசு அமைப்பதில் அனைத்துக் கட்சிகள் இடையே உடன்பாடு இருக்க வேண்டும். ஆனால், அது சாத்தியமில்லை. ஒருவேளை இடைக்கால அரசு அமைப்பதற்கான தேவை இருந்தால், எனது தலைமையின் கீழ்தான் அந்த அரசு அமையவேண்டும்.

நான் பிரதமர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் வலியுறுத்தியது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஒருவேளை நான் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தாலும், அது நாட்டின் அரசியல் வரலாறு தெரியாத சில பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்துதான் எழுமே தவிர, பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் நான் ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தமாட்டார்கள்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதில் மக்கள் பொறுமை காக்கவேண்டும். காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதற்குப் பிரதமர் இல்லத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கின்றன. பேச்சுவார்த்தை நடத்த விருப்பமில்லையெனில், அவர்கள் போராடிக் கொண்டே இருக்கட்டும்-என்றார் அவர். (அ)

# மஹிந்த கோ கம போராட்டத்துக்கும் தடை விதிப்பதற்கு நீதிமன்று மறுப்பு

கொழும்பு, ஏப். 26

கொழும்பு - கொள்ளுப்பிட்டி, அலரி மாளிகைக்கு முன்பாக பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக " மஹிந்த கோ கம " எனும் பெயரில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து செல்ல உத்தரவிடுமாறு பொலிஸார் முன் வைத்த கோரிக்கையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

போராட்டங்களில் ஈடுபடுவோர், பொது மக்களுக்கு இடையூறாக செயற்படுவர்களாயின் அது தொடர்பில் பொலிஸ் அதிகாரத்தை பயன்படுத்தி அதனை சமநிலை செய்ய முடியும் என சுட்டிக்காட்டிய கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷ கெக்குணவல, போராட்டத்தில் கலந்துக்கொள்பவர்கள் தொடர்பில் உறுதியான பெயர் விபரங்கள் கூட இல்லாமல் முன்வைக்கப்படும் கோரிக்கையை தம்மால் ஏற்க முடியாது என சுட்டிக்காட்டி பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தார்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து விலகுமாறு வலியுறுத்தி, எந்தவித கட்சிகளின் பங்களிப்பும் இன்றி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக காலி முகத்திடலை அண்மித்து " கோட்டா கோ கம " என பெயரிடப்பட்டுள்ள இடத்தில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.




இதற்கு ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக அலரி மாளிகைக்கு முன்பாகவும் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அதற்கு மஹிந்த கோ கம என போராட்டக்காரர்கள் பெயரிட்டுள்ளனர். அந்த போராட்டத்தை நிறுத்தவே பொலிஸார் நீதிமன்ற உத்தரவை கோரிய போதும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

# இலங்கைக்கு உதவவேண்டாம் நாணய நிதியத்துக்குக் கடிதம்!

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர

கொழும்பு, ஏப். 26

இலங்கை அரசாங்கத்துக்கு உதவ வேண்டாம் என்று சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்திய அரசுக்கு கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்துக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என்று கோரியே சர்வதேச நாணய நிதியத் துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ரத்ன ஜீவன் ஹூல் இந்த கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். (ஐ)

## எதையும் எதிர்கொள்ள...

எதிர்கொள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்தாலும் கூட மீண்டும் ஆட்சி அமைப்பதற்கு அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட கட்சிகளுக்கே அழைப்பு விடுக்கப்படும். தற்போதைய நிலையில், ஆட்சி அமைப்பதற்கு 48 பேர் கொண்ட சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இல்லை.

இதேபோன்று, தன்னிச்சையாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆட்சி அமைக்கக்கூடிய நிலை இல்லை.

இந்நிலையில், நூற்றுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இருக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியே மீண்டும் ஆட்சியை அமைக்கும் நிலை உருவாகும். இதனாலேயே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கையுடன் இருக்கிறார் என்றும் அந்தத் தரப்புக்கள் தெரிவித்தன. (ஐ)

## மஹிந்த...

சக்தி கோரிக்கை விடுத்துள்ளதாக வும் தற்போது 113 உறுப்பினர்களுக்கு பதிலாக 120 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சிகளிலுள்ள 64 பாராளுமன்ற உறுப்பினர்களுடன், ஆளுந்தரப்பிலிருந்து பிரிந்த 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து மொத்த எண்ணிக்கை 104 ஆக உயர்ந்தது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிய ஆளுந்தரப்பின் 10 உறுப்பினர்களுடன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 114 ஆனது.

20ஆவது திருத்தச் சட்டத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளித்த மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டதையடுத்து, மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 117 ஆனது. அமைச்சர் நாலக கொடஹேவ, டலஸ் அழகப்பெரும மற்றும் சரித ஹேரத் ஆகியோரும் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்கவுள்ளனர். அவர்களின் ஆதரவுடன் 120 எம்.பிக்கள் எமது பக்கம் உள்ளனர்-என்றார். (அ)

## யாழ்...

பேர் நேற்று அதிகாலை தனுஷ் கோடியை சென்றடைந்தனர் என தமிழகத் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு சென்றுள்ள 15 பேரும் யாழ்ப்பாணத்தில் காக்கைதீவு, ஆனைக் கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த 5 குடும்பங்கள் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்களை மீட்ட மெரைன் பொலிஸார் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் இல்லாத அளவுக்கு இலங்கையில் மிக மோசமான பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. அரசியல் நெருக்கடியும் உச்சம் தொட்டுள்ளது. பொருட்களின் விலைகள் நாளாந்தம் எகிறி வருகின்றது.

இதனால் அண்மைக்காலமாக தமிழகத்துக்கு பலர் அகதிகளாக வருகின்றனர். இதுவரை சுமார் 60 இற்கு மேற்பட்டோர், அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# முன்னாள் அமைச்சர்கள் பலர் கடும் அதிருப்தியில்

கொழும்பு, ஏப். 26

அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவி வகித்த 16 பேர் தற்போது அந்தப் பதவிகளை இழந்துள்ளதுடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் கடும் அதிருப்தியில் இருப்பதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறு அதிருப்தியில் இருக்கும் முன்னாள் அமைச்சர்கள் சிலர், முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை சந்தித்துள்ளனர் என கூறப்படுகிறது.

இவர்களைச் சந்தித்துள்ள முன்னாள் அமைச்சர்கள் தாம் எதிர்நோக்கி இருக்கும் சிரமமான நிலைமை பற்றி கூறியுள்ளனர். இவர்களில் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த மார்ச் மாதம் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட பின்னரே அரசாங்கத்துக்குள் முரண்பாடு ஏற்படத் தொடங்கியது.

இதனையடுத்து ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அனைத்து அமைச்சர்களும் தமது பதவிகளை ராஜினாமா செய்தனர். இதனையடுத்து சில மூத்த உறுப்பினர்கள் உட்பட இளம் அரசியல் வாதிகள் அடங்கிய புதிய அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தார்.

ஏற்கனவே அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகியவர்கள் சிலர் மீண்டும் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இது சம்பந்தமாக முன்னதாக அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகியவர்களில் எஸ்.எம்.சந்திரசேன, ஏற்கனவே தனது அதிருப்தியை அரசாங்கத்திடம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ள போவதில்லை என ஏற்படுத்திக்கொண்ட பொது இணக்கம் மீறப்பட்டமையே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

பொது இணக்கத்தை மீறி மீண்டும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட பிரசன்ன ரணதுங்க மற்றும் ரமேஷ் பத்திரன ஆகியோரை எஸ்.எம்.சந்திரசேன மறைமுகமாக சாடியுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# சில தினங்களில் ஆட்சி கவிழும்!

## ராஜித பரபரப்பு தகவல்



கொழும்பு, ஏப். 26

தற்போதைய அரசாங்கம் இன்னும் சில நாள்களுக்கு மாத்திரமே ஆட்சி யில் நீடிக்கும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, அரசாங்கத்தை விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும் எனவும் தெரிவித்தார்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, பிரதமர் கலந்துரையாடியுள்ளார். இதில் வெறும் 88 பாராளுமன்ற உறுப்பினர்களே கலந்துகொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 157 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில், 70 சதவீதமானவர்கள் கூட மஹிந்தவுக்கு ஆதரவளிக்கவில்லை.

அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள கட்சிகளுடன் கலந்துரையாடி அரசாங் கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கொண்டுவர உள் ளது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில், அனைவருடன் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை விட, அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

எனவே, இன்னும் சில நாள்களுக்கே தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கப்போகிறது. அடுத்த முறை நீங்கள் என்னை சந்திக்கும்போது, நாம் ஆட்சியில் அமர்ந்திருப்போம்.

ஆட்சியைக் கவிழ்க்க வருகிறோம். ஆனால், ஆட்சியில் பங்கெடுக்கப்போவ தில்லை என்கிற நிலைப்பாட்டிலேயே நாம் இருந்தோம். பல்வேறு கருத்து வேறுபாடு கொண்டவர்களுடன் எவ் வாறு ஆட்சியமைப்பது என் கிற பிரச்னை எமக்கு இருந்தது - என்றார். (அ)




கொழும்பு, ஏப். 26

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தற்போது அரிசிக்கும் வரிசையில் நிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சதோச விற்பனை நிலையத்தில் நாட்டரிசி ஒரு கிலோ 140 ரூபாவுக்கும், தீட்டல் அரிசி ஒரு கிலோ 110 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் சென்று நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ)

# ‘எமக்கு கோட்டா வேண்டும்’



கொழும்பு, ஏப். 26

எமக்கு கோட்டா வேண்டும் (We Want Gota) என்று எழுதப்பட்ட பதாகைளை ஏந்தியவாறு சிலர் நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 22 பேர் மாத்திரமே கலந்துகொண்டனர்.

அங்கு கருத்து வெளியிட்டுள்ள ஆர்ப்பாட்டகாரர்கள், நாட்டில் தற்போது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டம் ஒரு ஏமாற்று நடவடிக்கை எனவும் எதிர்வரும் மே முதலாம் திகதி 69 லட்சம் மக்களையும் வீதியில் இறக்க போவதாகவும் கூறினர்.

கோட்டா வீட்டுக்கு சென்றால் மாற்று யார், நான் 69 லட்சம் மக்களில் ஒருவன், எந்த வினைக்கும் எதிர்வினை உண்டு போன்ற வாசகங்கள் எழுப்பப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டகாரர்கள் ஏந்தி இருந்தனர். (அ)

# 28 ஆம் திகதி ரயில்வே வேலை நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 26

அரசுக்கு எதிராக மக்கள் முன்னெடுத்துவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் ரயில்வே தொழிற்சங்கங்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 28ஆம் திகதி நள்ளிரவு வரையில் இவ்வாறு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பிரதான தொழிற்சங்கள் பலவும் தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வியாழேந்திரன் வீட்டின் முன் கொலை; நீதி வேண்டி ஊறணியில் கவனவீர்ப்பு!

மட்டக்களப்பு, ஏப். 26

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக சுட்டுக் கொல்லப்பட்டவரின் பிறந்த நாளை முன்னிட்டு மட்டக்களப்பு - ஊறணி சந்தியில் கவன வீர்ப்பும் தாகசாந்தியும் முன்னெடுக்கப்பட்டது. நேற்று நண்பகல் 12 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பாலசுந்தரம் கடந்த வருடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்தி ரன் வீட்டு வாசலுக்கு முன்பாக அவரின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று கூறப் படுகின்றது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடக்கிறது.

இந்த நிலையில் இறந்தவரின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று இறந்தவரின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட் டது. இந்தப் போராட்டத்தில் அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும்

## வைத்திய நிபுணர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 26

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரை உடனடியாக பதவியில் இருந்து நீக்கி இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் லக்குமார பெர்னாண்டோ தெரிவித்தார்.

வருடாந்த பொதுக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

